உ

# திருக்குறள் கதைகள்

## இரண்டாம் பகுதி

## FORM, II.

ஏழாம் வகுப்பிற்குரியது

அரசியலார் வகுத்த புதிய பாட திட்டப்படி எழுதியது

வித்வான்
ச. சேதுசுப்பிரமணியன்
சிதம்பரம்.

ஒற்றுமை ஆபீஸ்
தியாகராயநகர் :: சென்னை

விலை அணா 8

TB
031C7[illegible]
N48
146990

TB 031(C) N48

# முகவுரை

இளைஞர்க்கென்று வெளிவந்துள்ள திருக்குறட் பதிப்புக்கள் பற்பல. அவற்றுள் ஒன்றேனும் மாணவர் மனப் பாங்கறிந்து பயிற்றும் வகை பற்றியதன்று. இவ்வெளியீட்டு நூல்கள் அக்குறைபாட்டை அகற்ற வந்தவை என்னலாம்.

வகுப்பின் இளைஞர் தரங்கட்கு ஏற்பப் படிப்படி உயர்ந்து, காலம் நாடு இலக்கியம் சமயத் தொடர்புடைய நவீன வரலாறுகள், சிறுகதைகள் இவைகளை இனிப்பக் கூறி, அவற்றின் கருத்தாகத் திருக்குறட் பாக்களைப் பசுமரத்தாணிபோல் இளைஞர் உள்ளங்களில் பதிவைத்திருப்பது இந்நூலாசிரியர் கையாண்ட புதிய தனிமுறை. இத்திறம் ஆசிரியரது உளநூல் ஆய்வைக் காட்டுகிறது. விளக்கமும் வினாக்களும் இலக்கணக் குறிப்பும் இந்நூலை மேலும் அழகு செய்து நிற்கின்றன.

எனவே, பலராலும் போற்றிக் கொள்ளப் பெறும் தகுதி வாய்ந்த அரிய நூற்களை வெளியிட்டு உதவுகின்ற சென்னை ஒற்றுமை நிலையத்தாரின் நன்முயற்சிக்குத் தமிழகம் முதன்மை யளிப்பது ஒருதலை.

நற்பயன் தருவன என்றும், எங்கும், சிறந்தோங்குவனவாக என்று.

சு. சிவப்பிரகாசன்,
தலைமைத் தமிழாசிரியன்,
திரு ஒற்றீசர் உயர் நிலைப்பாடசாலை.

சென்னை-7,
29-11-48.

சென்னை-600
146.490

# திருக்குறள் கதைகள்

## மூலமும் உரையும்

---

### கடவுள் வாழ்த்து

திருவாமூரில் பிறந்த திலகவதியார், தாய், தந்தை, கணவன் ஆகிய இவர்கள் இறந்த பின்னும் தம் தம்பியாராகிய நாவுக்கரசர் வாழ வேண்டும் என்று உயிர் வாழ்ந்து வந்தார். அத் தம்பியார் தமக்கையை விட்டுச் சமண சமயத்தில் சேர்ந்தார். இதனால் அத்தமக்கையாருக்கு மனவருத்தம் பெரிதாயிற்று. இவ் வருத்தம் எவ்விதத்திலும் தனக்குச் சமம் இல்லாத கடவுளின் பாதத்தை இடைவிடாது நினைத்தால் ஒழிய, நீங்காது என்று திருவதிகை வந்து அங்குள்ள கடவுளை நினைத்து வழிபட்டு வந்தார். அக் கடவுள் அருளால் அந் நாவுக்கரசர் சூலை நோய் வந்து யாவராலும் நீக்க முடியாமையால் மீண்டும் தமக்கையாரை அடைந்து சூலை நோய் நீங்கி இன்பமாக வாழ்ந்தார். கடவுளின் பாதத்தையே இடைவிடாது நினைத்திருந்தமையால் திலகவதியாரின் மனக் கவலையும் நீங்கியது.

(1) தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

(பதவுரை) தனக்கு உவமை இல்லாதான் – எவ்விதத்தாலும் தனக்குச் சமம் இல்லாதவனது, தாள் சேர்ந்தார்

க்கு - பாதங்களை இடைவிடாது நினைத்தவர்க்கு, அல்லால் -அல்லாமல், மனக் கவலை-நெஞ்சில் நிகழும் துன்பங்களை, மாற்றல் அரிது - நீக்குதல் உண்டாகாது.

(கருத்து.) கடவுள் பாதத்தை நினைப்பவர் துன்பம் அடையார்.

(கேள்வி.) மனக்கவலையை மாற்றி வாழ்பவர் எவர்?

---

## அறன்வலியுறுத்தல்

வலியுறுத்தல்=வற்புறுத்திக் கூறுதல்

கண்ணனுக்கு இரண்டு தாரம். இரண்டாம் மணம் நடக்குமுன் அவன் தாய், அவனிடம் கண்ணு! "நீ உண்ணும்போது தர்மமாகப் பிறர்க்குக் கொடுத்துப் பின் உண். அதுவே இன்பம்; துன்பம் தராது; புகழும் உண்டு." என்று இதமாகச் சொல்லி அவன் வாக்கையும் பெற்றாள். அவனும் அவ்விதமே தர்மம் செய்து பின் உண்பான். ஒரு நாள், இளையவளிடம் அன்பாய் இருப்பதாகப் பொறாமை கொண்டு மூத்தவள், மனம் பொறாது அவர்கள் இருவரையும் அழிக்க எண்ணிக் குழம்பில் நஞ்சைக் கலந்து வைத்தாள். அக் குழம்பு கலந்த உணவைத் தர்மத்தின் பொருட்டுத் தன் அருகே இருந்த நாய்க்கு வைக்க அந் நாய் அதைப் புசித்து மயங்கி வீழ்ந்து இறந்தது. இதைக் கண்ட அவன் தர்மமே தனக்கு இன்பம் தந்தது என்றும் தர்மம் செய்பவருக்குத் துன்பம் உண்டாகாது என்றும், தன் இரு மனைவியையும் அழைத்துப் புத்தி சொன்னான். அப்போது மூத்தவள் தான் செய்த துன்பத்தைத் தர்மமே துணையாக இருந்து இன்பம் அளித்ததைக் கண்டு பொறாமை நீங்கிப் புகழ்ந்தாள்.

(2) அறத்தான் வருவதே யின்பம் ; மற்றெல்லாம்
புறத்த ; புகழும் இல.

(பதவுரை.) அறத்தான் வருவதே - தர்மத்துடன், சேர்ந்து வாழ்வதே, இன்பம் - சுகம் ஆகும், மற்ற எல்லாம் - (தர்மத்தோடு சேராது) வேறாக வாழ்வனயாவும், புறத்த - (இன்பமானாலும்) துன்பம் தருவன, புகழும் இல - (அத்துன்பமே அல்லாமல்) கீர்த்தியும் இல்லை.

(கருத்து.) தர்மத்துடன் சேர்ந்து வாழ்வதே இன்பமும் புகழும் ஆகும்.

(கேள்வி.) இன்பத்தையும் புகழையும் தருவது எது?

---

## புதல்வரைப் பெறுதல்

வேத்திரகீயம் என்ற நகருக்கு அருகேயுள்ள காட்டில் பகன் என்னும் அரக்கன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அவ்வூரில் உள்ளவர் திரளான சோற்றையும் ஒரு குழந்தையும் முறையாக ஒவ்வொரு நாளும் அளிப்பது வழக்கம். ஒரு நாள் பாண்டவரில் ஒருவனை வீமனை அவன் உணவுக்காக அனுப்ப, அவ்வீமன் அவ்வரக்கனைக் கொன்று வெற்றியோடு அவனுக்கு அனுப்பிய சோற்றையும் உண்டு களித்து வந்தான். இச் செயலை அறிந்த அவ்வூரார். அவன் தாயாகிய குந்தி தேவியிடம் ஓடி, தாயே! நெடுநாள் எங்களுக்குத் துன்பம் செய்த அரக்கனை ஒழித்த வீமனே எங்கள் தெய்வம் என்று கொண்டாடினார்கள். அச்சமயம் குந்திதேவி, அவ்வீமனைப் பெற்ற காலத்தில் உண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும் பெருமகிழ்ச்சியை அடைந்தாள்.

(3) ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(பதவுரை.) தன் மகனை - தனது புதல்வனை, சான்றோன் - கல்விகேள்விகளால் நிறைந்தவன், எனக் கேட்ட தாய் - என்று அறிவுடையார் சொல்லக் கேட்டதாய், ஈன்ற பொழுதில் - தான் பெற்ற பொழுதுண்டான மகிழ்ச்சியிலும், பெரிது உவக்கும் - மிகுதி ஆக மகிழும்.

(கருத்து.) தாய், மகனைப் பெற்ற காலத்தைவிட ஆன்றோன் என்ற போது மகிழ்வாள்.

(கேள்வி.) தாய் எப்பொழுது ஈன்ற பொழுதில் பெரிது மகிழ்வாள்?

---

## அன்புடைமை

சேர நாட்டைப் பெருஞ் சேரல் இரும் பொறை என்பவன் ஆண்டு வந்தான். இவன் அதிகமானுடைய தகடூரை வென்றான். இதனால் இவனுக்குச் சேரமான் தகடூ ரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறை என்பது பெயர், இவன் வறுமையுற்ற அரிசில் கிழார்க்கு மிகுதியான பொன்னை அளித்தான். இதைக் கேட்ட மோசிகீரனார் இவனைப் பாடித் தன் வறுமையைப் போக்கலாம் என்று இவன் அரண்மனையை அடைந்தார். நெடுந் தூரம் நடந்து வந்த களைப்பால் இவன் மத்தளம் கழுவுதற்காக எடுத்துச் சென்ற அக் கட்டிலில் படுத்துத் தூங்கி விட்டார். வெளியே வந்த அரசன் கண்டு விசிறி எடுத்து வந்து விசிறினான். விழித்தெழுந்த புலவர் கண்டு அரசே! என் செயலுக்குக் கோபியாது, அன்பு கொண்டு கால் நோவ நின்று வீசிய பெருமை நிறைந்த தோள்களை உடைய உன் புகழே, எல்லா உலகிலும் சென்று சேர்க என்று வாழ்த்தினார்.

**(4) அன்பின் வழியது உயிர்நிலை. அஃது இலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு.**

(பதவுரை.) உயிர் நிலை - உயிர் தங்கி வாழும் உடம்பு, அன்பின் வழியது - (அன்பு காரணமாக) அவ்வன்பு வழியிலே செல்லும் உடம்பு ஆகும், அஃது இலார்க்கு - அந்த அன்பு இல்லாதவர்க்கு, உடம்பு - (உண்டான) சரீரங்கள், என்புதோல் போர்த்த - எலும்பைச் சதையால் மூடினதாகும். (உயிர் தங்கி வாழ்வன ஆகா)

(கருத்து.) அன்புள்ளவர் உயிர் உள்ளவர் ஆவர்.

(கேள்வி. அன்பில்லாதவர் உடம்பு யாதாகும்?

---

## அன்புடைமை

அரும் பாடுபட்டுச் சுதந்திரத்தை அளித்த மகாத்துமா காந்தி ஒவ்வொரு இந்திய மக்கள் மனதிலும் குடியாகத் தங்கினர். அவர் 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ந் தேதி இறந்தார் என்று வானொலி முழங்கியது. இதைக் கேட்ட மக்கள், தங்கள் தொழிலை மறந்து அழுத கண்ணும் தொழுத கையுமாக ஒவ்வொரு வானொலி நிலையத்திலும் நின்று எங்கள் கருணை மூர்த்தியே! எங்களை விட்டுப் பிரிய மனம் வந்ததா! என்று கதறினார்கள். உருட்டி விழிக்கும் கண்களையுடையவரும் அவ் வருத்தச் செய்தியைக் கேட்டு மறைத்து வைக்க முடியாமல். தங்கள் விழிகளிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீரை ஊற்றி உள்ளிருந்த அன்பைப் பலரும் அறிய வெளிக்காட்டி அழுது புலம்பினார்கள்.

**(5) அன் பிற்கும் உண்டோ; அடைக்குந்தாழ் ஆர்வலர் புண்கணீர் பூசல் தரும்.**

(பதவுரை.) அடைக்குந் தாழ் - பிறர் அறியாமல் மூடி வைக்கும் தாழ்ப்பாள், அன்பிற்கும் - பிரியத்திற்கும், உளதோ - இருக்கிறதோ ?, ஆர்வலர் - அன்பு கொள்ளப் பட்டவரது,புன் கண்ணீர் –( துன்பத்தைப் பார்த்தபோது அன்புள்ளவர் விழியில் இருந்து ஒழுகுகின்ற) வருத்தக் கண்ணீரே, பூசல் தரும் – (உள் இருக்கும் அன்பை யாவரும் அறிய) வெளிக்காட்டும்.

(கருத்து.) துன்பம் கண்ட பொழுது அழுபவரே உள்ளன்புடையவர்.

(கேள்வி.) உள் இருக்கும் அன்பை வெளிக் காட்டுவது எது?

---

## விருந்தோம்பல்

ஓம்பல்=பாதுகாத்தல்.

சிதம்பரத்தின் மேற்கே 10 மைல் தூரத்தில் உள்ள, மருதூரில் செல்வ மகள் நிறைந்து விளங்கினாள். அவ்வூரில் உள்ள செல்வத்தைத் திருடிச் செல்வதற்காக சில கள்ளர்கள் வந்து அவ்வூர்த் திண்ணையில் படுத்திருந்தனர். இரவில் உண்ணும் போது இராமையப் பிள்ளை, அவ்வூருக்குப் புதிய விருந்தினர் வந்தால் அவர்களுக்கு உணவளித்து விட்டு உண்பது பழக்கம். அவ்விதமே அவர்களையும் அழைத்து உணவளித்தார். அதனால் அவர்கள் அவர் வீட்டில் திருடாமல் ஏனைய வீடுகளில் திருடிச் சென்றனர். மறுநாள் இதை அறிந்த அவ்வூரார், விருந்தினரை உபசரித்ததால் அவர் வீட்டில் செல்வமகள் விரும்பி வாழ்கிறாள் என்று புகழ்ந்து தாங்களும் விருந்தளிக்கத் தொடங்கினார்கள்.

(6) அகன் அமர்ந்து செய்யாள் உறையும். முகன்அமர்ந்து
நல் விருந்து ஓம்புவான் இல்.

(பதவுரை.) முகன் அமர்ந்து - முகம் மகிழ்ந்தவனாய், நல் விருந்து- (தன்னிடம் வந்த) நல்ல விருந்தினரை, ஓம்புவான் - உபசரிப்பவனுடைய, இல் - வீட்டில், செய்யாள் அகன் அமர்ந்து - திருமகள் மனம் விரும்பி, உறையும் - தங்கி இருப்பாள்.

(கருத்து.) விருந்தினரை உபசரிப்பவனுக்குச் செல்வம் வளரும்.

(கேள்வி.) திருமகள் மன விருப்பத்துடன் தங்கும் இடம் எது?

---

## இனியவை கூறல்

பாரதப் போரில் கண்ணன் படைத் துணையாக வரவேண்டும் என்று துரியோதனனும் அருச்சுனனும் துவாரகைக்குச் சென்றார்கள். அது சமயம் அவன் உறங்கிக்கொண்டிருந்தான். சென்ற துரியோதனன் அவன் தலைப்பக்கத்தில் இட்ட ஆசனத்தில் இறுமாப்புடன் இருந்தான். அந்த அருச்சுனன், அவனது பாதத்தில் வணங்கிப் பணிவுடன் நின்றான். நித்திரை நீங்கி எழுந்த அக் கண்ணன் வந்த காரணம் யாது? என்ன அந்த அருச்சுனன் வணங்கி அன்பு மொழிகளால் எங்களுக்குத் துணையாகவேண்டும் என்று வேண்டினான். அவனும் வருகிறேன் என்று வாக்களித்தான். துரியோதனன் முடி முதலிய பல ஆபரணம் அணிந்திருந்தும் அவனை மதிக்கவில்லை. பணிவும் இன் சொல்லும் ஆன ஆபரணத்தையுடைய அந்த அர்ச்சுனனே கண்ணனைப் படைத் துணையாகப் பெற்றான்.

(7) பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

(பதவுரை.) பணிவுடையன் - வணக்கம் உடையவன், இன் சொலன் ஆதல் - அன்பு மொழி பேசுப்பவனாக ஆகு

தல், ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - ஆபரணம் ஆகும், மற்றுப் பிற - (இவை இல்லாத) வேறு உடம்பில் போடும் ஆபரணம், அல்ல - (ஆபரணம்) ஆகா.

(கருத்து.) வணக்கமும், இன் சொல்லுமே மக்களுக்கு ஆபரணமாகும்.

(கேள்வி.) எவை மக்களுக்கு அணியாகும் ?

---

## செய்ந்நன்றி அறிதல்

திருவாவடுதுறை மகா சன்னிதானத்துடன் மகா வித்வான் மீனாட்சிசுந்திரம் பிள்ளை அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது சன்னிதானம் தனக்கு வந்த சில வாழ்த்துப்பாடலைப் பிள்ளை அவர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள். பிள்ளை அவர்களுக்கு வெள்ளெழுத்து வந்தமையால் கண்ணாடி இல்லாமல் படிக்க முடியாது. இதை அருகே கண்டுகொண்டிருந்த காரியஸ்தர் உள்ளே ஓடி பெரிய கணக்கப்பிள்ளையிடம் இருந்த கண்ணாடியை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். அதன் உதவியால் படித்து வெளியே வந்து "காரியஸ்தரைப் பார்த்து நீர் இன்று சமயத்தில்செய்த உதவிக்கு இவ்வுலகத்தையே ஈடாகக் கொடுத்தாலும் ஒவ்வாது. உலகை விட உயர்வான உதவியைச் சமயத்தில் செய்ததை என்றும் மறவேன்" என்றார்.

(8) காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(பதவுரை.) காலத்தினால் - (ஒருவனுக்குத் துன்பம் வந்த சமயத்தில்), செய்த நன்றி - (ஒருவன்) இயற்றிய உபகாரம், ஞாலத்தின் - (உபகாரம் சிறிதாயினும், அச்

சமயத்தைப் பார்க்க) பூமியைக் காட்டிலும், மாணப் பெரிது – மிகவும் பெரியது ஆகும்.

(கருத்து.) சமயத்தில் செய்த உதவி நிலவுலகிலும் மேலானது.

(கேள்வி.) ஞாலத்தின் மாணப் பெரியது எது?

---

## நடுவு நிலைமை

சென்னையில் முத்துவும் கோபாலனும் பழக் கடை வைத்தார்கள். சுவாமிநாதன் சாத்துக்குடிப் பழம் வாங்குவதற்காகப் பழக் கடைக்குச் சென்றான். முத்துவின் கடையில் கேட்டான். முத்து:—இப்பழம் வந்து ஒருவாரம் ஆகிறது. அதனால் இதில் சாறு இருக்காது. உங்களிடம் பணம் வாங்கவில்லையா? இது வேண்டாம் என்றான். கோபாலன் கடையில் கேட்டான். இன்றுதான் வந்தது என்று பழையபழத்தைக் கொடுத்தான். பழத்தை உரித்துப் பார்க்க உள்ளே சாறு இல்லாமையால் கோபாலனை வெறுத்து அன்று முதல் சுவாமிநாதன் முத்துவின் கடையிலேயே பழம் வாங்க ஆரம்பித்தான். பிறர் பொருளையும் தம் பொருள் போல் எண்ணிப் பேசியதால் முத்துவின் கடைக்குத் திரளான மக்கள் வந்து வியாபாரம் செய்தார்கள்.

(9) வாணிகம் செய்வார்க்கு வாணிகம் : பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

(பதவுரை.) பிறவும் தமபோல் - பிறர் பொருளையும் தம் பொருள் போல, பேணிச் செயின் - விரும்பிச் செய்தால், வாணிகம் செய்வார்க்கு - வியாபாரம் செய்பவர்க்கு, வாணிகம் - சிறந்த வியாபாரம் ஆகும்.

(கருத்து.) பிறர் பொருளைத் தம் பொருள் என நினைப் பவரே வணிகர்.

(கேள்வி.) சிறந்த வியாபாரம் நடக்க யாது செய்தல் வேண்டும்?

---

## அடக்கமுடைமை

சீர்காழியில் வாழ்ந்த சிதம்பரநாத முதலியார் அவர்கள் தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்வதற் காகப் புதிதாகக் காவிரி ஆற்றிலிருந்து ஓர் கிளை வாய்க் கால் பல ரூபாய் செலவிட்டு வெட்டினர்கள். வெட்டி ஆற்றில் தண்ணீர் வந்தது. தண்ணீரைக் கண்டதும் ஒரு ஏக்கர் நில முள்ள குடியானவன் ஒரு பாடும் படாமல் என் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச் சிய பின் தான் முதலியார் நிலத்திற்கு விடுவேன் என்றான். இதைக் கேட்ட முதலியார் ஆட்கள் தங்கள் முதலியாரிடம் சொன்னார்கள். அவர் அவ்வேழைக்கு உதவுபவர் யார்? அந் நிலத்திற்கு நீர்ப் பாய்ச்சி அதை உழுதபின் நம் நிலம் நீர்ப் பாய்ச்சி உழலாம் என்று கூறினர். இதைக் கேட்ட ஏழை செல்வத்துடன் வேறொரு செல்வமாகிய அடக்கமாகிய செல்வத்தை யுடைய முதலியார்க்கே அந் நிலத்தை அளித்தான். அருகில் உள்ளவர் அடக்கமே செல்வம் தரும் எனப் புகழ்ந்தார்கள்.

(10) எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

(பதவுரை.) பணிதல் - (செருக்கில்லாமல்) அடங்குதல், எல்லார்க்கும் நன்று - யாவர்க்கும் நல்லதே ஆனாலும், அவருள்ளும் ஆம் - அந்த யாவருள்ளும், செல்வர்க்கே -

பொருளுடையவர்க்கே, செல்வம் தகைத்து - வேறொரு பொருளாகும் சிறப்பையுடையது.

(கருத்து.) செல்வமுடையவர் அடங்கி வாழ்தல் வேண்டும்.

(கேள்வி.) செல்வர்க்கே செல்வமாவது எது? அனை வர்க்கும் நல்லது எது?

---

## ஒழுக்கமுடைமை

காவிரிப்பூம் பட்டிணத்தில் சாதுவன் என்று ஓர் வணிகன் இருந்தான். அவன் வியாபாரத்தின் பொருட்டுக் கப்பலேறிச் சென்றான். கடுங் காற்று வேகத்தால் கப்பல் கவிழ்ந்தது. கப்பலில் இருந்த அவன், கடலில் நீந்திச் சென்று பக்க மிருந்த நாகர் வாழும் மலையை அடைந்தான். அங்கு வாழ்ந்த நாகர் தலைவன், இவன் பசியையும் களைப்பையும் கண்டு, இவனுக்குக் கள்ளும் ஊனும் கொடுக்கக் கட்டளையிட்டான். அதைக் கேட்ட அவன், "கள்ளும் ஊனும் உண்பது. என் குல ஒழுக்கம் அல்ல. பசியாய் இருந்து உயிரை விட்டாலும் விடுவேன் இவற்றை உண்ணமாட்டேன்" என்று இவற்றால் வரும் கெடுதியையும் எடுத்துச் சொன்னான். பசியினும் இவனது குல ஒழுக்கத்தைக் கண்ட நாகர் தலைவன் இவனையே குருவாகக் கொண்டு இவனிடம் பல அறங்களைக் கேட்டுக் கொண்டான். இவனுக்கு மிகுதியான பொருள்களை வெகுமதியாகக் கொடுத்து மீண்டும் கப்பலில் ஏற்றிக் காவிரிப்பூம்பட்டிணத்திற்கு அனுப்பினான். இவன் பசி காரணமாக உண்டிருந்தால் மக்கள் பிறப்பிலும் கீழான விலங்குப் பிறப்பாக எண்ணி இவனை நாகர்கள் அடித்து உண்டிருப்பார்கள்.

(11) ஒழுக்கம் உடைமை குடிமை ; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

(பதவுரை.) ஒழுக்கம் உடைமை - (எவர்க்கும் தத்தம் சாதிக்கேற்ற) நன்நடத்தையைப் பொருந்தல், குடிமை – தம் குலத்தை அடைந்தமை ஆகும், இழுக்கம் – (அந்த நன் நடத்தையில்) தவறுதல், இழிந்த பிறப்பாய் விடும் – (தாம் பிறந்த சாதியிலும்) தாழ்ந்த சாதி ஆகிவிடும்.

(கருத்து.) குல ஒழுக்கத்தில் தவருது வாழ்தல் வேண்டும்.

(கேள்வி.) ஒழுக்கமுடைமைம் தருநன்மை எது ?

---

## ஒழுக்கமுடைமை

பாண் குலத்தில் உதித்த திருபாண் ஆழ்வார் என்பவர் ஸ்ரீரங்கத்தின் அருகே செல்லும் காவிரியில் நீராடிப் பாம்பணையில் பள்ளி கொண்ட பரமனைத் தொழுது நின்ருர். அப்போது அக்கோயில் அர்ச்சகர் நீர் கொண்டு வரக் காவிரிக்குச் சென்றனர். அவரைக் கண்டு இப்பாணர் பெருமான் விலகவில்லை என்று இவரை சொல்லத்தகாத தாழ்ந்த சொற்களால் வைதனர். பரந்தாமனிடத்திலேயே மனதைச் செலுத்திய அப்பாணர்க்கு இவர் வைதது எதுவும் கேட்கவில்லை. பின் விலகிப்போய் காவிரியில் தண்ணீர் மொண்டு சென்ருர். இவர் வைதது பரந்தாமனுக்கே தாங்கவில்லை. அதனல் இரவு அர்ச்சகர் கனவில், திருமால் போய் நீ வைதவர் நம் பக்தர். அவரை உன் தோளில் தூக்கி என்னிடம் கொண்டுவா என்ருர். மறுநாட் காலை அவ்வாறே சென்று தூக்கி வந்தார். அப்போது மக்கள் கடவுளை நினைத்த ஒழுக்கத்தால் உண்டான உயர்வையும், அர்ச்சகர் வைது இகழ்ந்ததால் அவரே தோளில் சுமக்கும் செயலையும் கண்டு ஒழுக்க வழியில் நடக்கலானுர்கள்.

(12) ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.

(பதவுரை.) ஒழுக்கத்தின் - (மக்கள் தமது) நல்ல நடத்தையினால், மேன்மை எய்துவர் - சிறப்பு அடைவர், இழுக்கத்தின் - அந் நடத்தை தவறுதலால், எய்தாப்பழி - அடாத பழியை, எய்துவர் - அடைவர்.

(கருத்து.) மக்கள் நன்நடத்தையால் பெருமையும், அது தவறுவதால் இழிவையும் அடைவர்.

(கேள்வி.) அடாப் பழியை எய்துபவர் எவர்?

---

## பொறையுடைமை

ஆகாயத்தில் பறந்து செல்லும் கொக்கு இட்ட எச்சம், கொங்கணர் தலையில் விழுந்தது. விழுந்த எச்சமுள்ள அவர், கொக்கைப் பார்க்க அக்கொக்கு எரிந்து சாம்பலானது. பின், இவர் திருவள்ளுவர் வீட்டில் போய்ப் பிச்சை கேட்டார். அப்போது வாசுகி அம்மையார் வள்ளுவருக்குச் சாதம் போட்டுக்கொண்டிருந்தனர். சாப்பிட்டு முடிந்தவுடன் பிச்சை போடச் சாதம் கொண்டு வெளியே வந்தனர். அவ்வம்மையை அவர் முறைத்துக் கொடூரமாகப் பார்த்தார். அதைக் கண்ட அம்மையார் "கொக்கு செய்த குற்றத்திற்காக அதைப் பார்த்து எரித்து அந்த நேரம்மட்டும் மகிழ்ச்சி அடைந்தீர். நான் நாயகனுக்குச் சோறிட்டு வந்திருக்கும் என்னை எரித்து விடலாம் என்று முறைக்கும் உம்மை அழிக்கும் கற்புவல்லமை என்னிடம் உள்ளது. அவ்விதம் அழித்துஅடையும் ஒரு நாள் இன்பத்தை நான் விரும்பவில்லை என்றும் புகழ்தரும் பொறுமையால் உம்மை மன்னிக்கிறேன் என்ற கருத்தமைய, கொக்கென்று எண்ணினையோ கொங்கணவா! என்று

கூறினர். இதைக்கேட்டமுனிவர் அவ்வம்மையாரின் பொறுமையைப் புகழ்ந்து சென்றார்.

(13) ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்.

(பதவுரை.) ஒறுததார்க்கு – (குற்றம் செய்தவனைத்) தண்டித்தவருக்கு, ஒரு நாளை - ஒரு தினம், இனபம் - மகிழ்ச்சியே (உண்டாகும்), பொறுத்தார்க்கு – (அக்குற்றத்தை)சகித்துக் கொண்டவருக்கு, பொன்றும் துணையும் – (உலகம்) அழியும் அளவும், புகழ் - கீர்த்தி (உண்டாம்)

(கருத்து.) பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்தலே புகழ் ஆகும்.

(கேள்வி.) உலகம் அழியும் அளவும் புகழை அடைபவர் எவர் ?

---

## அழுக்காருமை

அழுக்கு = பொருமை

அழுக்காருமை, = பொருமைப்படாமை.

பாண்டுவும் திருதராஷ்டிரனும் சகோதரர்கள். பாண்டுவுக்குக் குந்திதேவியும், திருதராஷ்டிரனுக்குக் காந்தாரியும் மனைவியாக அமைந்தார்கள். குந்திதேவி முதலில் கருப்பமுற்று தருமனைப்பெற்றாள். என்றதைக்கேட்ட காந்தாரி, பொருமை தாங்காமல் நாம் முதலில் பெறவில்லையே, என்று தான் கருப்பம் உற்றிருந்தாலும் தன் வயிற்றில் கல்லை எடுத்துக் கொண்டு இடித்தாள். பொருமை காரணமாக இடித்ததால்; தன் வயிற்றில் இருந்த மக்கட்செல்வம் அழிந்தது. கீழ்மக்களும் செய்யத்தகாத இழிந்த செயலைச் செய்தாள் என்னும் பழியில் இவளைக் கொண்டு சேர்த்தது. இதனல் பொருமை தன்

னிடத்தில் உள்ளசெல்வத்தை அழித்ததோடு அதை யுடையவனுக்கு இம்மையில் பழியும் மறுமையில் இன்ப மில்லாமையும் உண்டாக்கினது.

(14) அழுக்காறு என ஒரு பாவி ; திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

(பதவுரை.) அழுக்காறு - பொறாமை, என ஒரு பாவி – என்று சொல்லப்பட்ட சமம் இல்லாத பாவி, திருச் செற்று-(தன்னை உடைய ஒருவன்) செல்வத்தை அழித்து, தீயுழி - (மறுமையில்) இருள் நிறைந்த நரகத்தில், உய்த்து விடும் - (கொண்டு போய்ச்) சேர்த்து விடும்.

(கருத்து.) பொறாமையுடையவர் இம்மையில் செல் வத்தை இழப்பதோடு மறுமையில் நரகத்தையும் அடை வர்.

(கேள்வி.) பொறாமையுடையவர் அடையுங் கேடு என்ன ?

---

## வெஃகாமை

வெஃகாமை = விரும்பாமை

திருவிடை மருதூரில் ஒருபெரிய செல்வர் வாழ்ந்து வந்தார். அவருக்குக் குழந்தைச்செல்வம் இல்லை. திடீரென இறந்து விட்டார். அவர் இறந்த பின் பெருஞ்செல்வம் அவருடைய பங்காளிகளைச் சேரும். அவர் மனைவிக்கு ஒன்றும் எழுதவில்லை. இதனால் அருகில் இருந்தவர் ஒரு பத்திரம் அப் பெருஞ் செல்வத்தை மனைவி அனுபவிக்கும்படியாக எழுதி அதை ஆவணக்களரித்தலைவரிடம் கொண்டு போய்ப் பதிந்துகொள்ளச் சொன்னார்கள். வேண்டிய பொருளும் தருவதாகச் சொன்னார்கள், அப்போது அவர், உயிருடன் இருந்து தங்களிடம் பொருள் இல்லை என்றாலும் என்செலவில் நான் பதிந்து உங்களுக்கு உதவிசெய்வேன். இப்போது உங்கள்

பொருளை விரும்பி தர்மம்இல்லாத வழியில் நான் பதிந்து கொள்வது குற்றமாகும். வேண்டாம் போங்கள் என்று நல்லறிவு சொல்லி அனுப்பினர். அறவழியில் நடந்ததால் இவருக்கு பெரியதலைவர் பதவி மறுவருஷத்திற்குள்ளேயே கிடைத்தது.

(15) அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன் அறிந்து ஆங்கே திரு.

(பதவுரை.) அறன் அறிந்து – தர்ம வழிகளைத் தெரிந்து, வெஃகா அறிவுடையார் - (பிறர் பொருளை) ஆசைப்படாத புத்தியுள்ளவர்களை, திரு – செல்வ மகள், திறன் அறிந்து -(தான் சென்று சேர்வதற்கான காலமும் இடமும் ஆகிய) முறைகளைத் தெரிந்து, ஆங்கே – அம் முறைகளின்படி, சேரும் - சேர்வாள்.

(கருத்து.) பிறர் பொருளை ஆசைப் படாதவர் இடத்தில் திருமகள் தானே போய்ச் சேர்வாள்.

(கேள்வி.) திருமகள் தானே சென்று எவரிடம் அடைவாள் ?

---

## புறங்கூறுமை

வடநாட்டை ஆண்ட கனகவிசயர்கள் தமிழ் மன்னர்களை இகழ்ந்துபேசினர்கள். இதைக்கேட்ட சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று அவர்களை வென்று அவர்கள் தலையில் கண்ணகிக்கு வடிவம் அமைக்க எடுத்தகல்லை ஏற்றித்தூக்கிவரச்செய்து, அச்செயலைச்சோழபாண்டியர்க்கும் தெரிவிக்கும்படி கட்டளையிட்டான் அதைக்கண்ட சோழபாண்டியர். அச்செயலைப் புகழ்ந்து சொல்லி மேலும் நட்பு அடைதலை விரும்பாமல், தோற்றவன் தலையில் கல்லைத் தூக்கிவைத்து அழைத்து வருவது நீதியா! என்று இழிவாகப்பேசினர். இதைத் தூதர் மூலம் அறிந்த செங்குட்டுவன். கோபம் கொண்டு அவர்கள் மீது

சண்டைக்குப் புறப்பட்டான். அப்போது மாடல மறையோன் தடுத்ததால் போர் நடக்கவில்லை. இதனால் தங்களிடம் அன்புள்ளவர்களை, மேலும் புகழ்ந்து பேசி, நட்பாகச் செய்துகொள்ள அறியாதவர். இகழ்ந்து பேசித்தங்களிடம் பகை கொள்ளும்படி செய்துவிடுவர்.

**(16)** பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்; நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

(பதவுரை.) நகச் சொல்லி - கூடி மகிழுமாறு அன்பு மொழிகளைப்பேசி, நட்பு ஆள்தல் – அயலாரோடு சிநேகம் கொள்ளுதலை, தேற்றாதவர் – தெளிவாக அறியாதவர், பகச் சொல்லி - (தம்மை) விட்டு நீங்கும்படி புறங் கூறி, கேளிர்ப் பிரிப்பர் – தம் உறவினரையும் வேறுபடச் செய்வர்.

(கருத்து.) புறம் கூறுபவர்க்கு யாவரும் பகை ஆவர்.

(கேள்வி.) தம் கேளிரையும் பிரியும்படி செய்பவர் எவர்?

ஆள் + தல் = ஆடல்.

---

## தீவினை அச்சம்

ஏழைக்குடியானவன் ஒருவன் தன் காலங்கழிக்க மணிலாப்பயறு வியாபாரம் செய்து வந்தான். முதலில் நல்ல பயறாகப் பார்த்து வாங்கி, விற்கக்கொண்டு போனதால் பெரிய வியாபாரிகளும் இவனிடம் வாங்க ஆரம்பித்தார்கள். இதனாலும் தன்னுடைய வறுமைபோகவில்லை என்று அப்பயறுடன் கூழாங் கற்களைச் சேர்த்து விற்க ஆரம்பித்தான். பெரிய வியாபாரிகள் முதலில் உண்டான நம்பிக்கையால் அப்படியே சரக்கைப் பார்க்காமல் கொட்டிவிடச்

சொல்வார்கள். இவ்விதம் பலநாள் வியாபாரம் நடந்தது. ஒருநாள் 100 மூட்டையை வாங்கிப் பார்க்க அதில் கல்இருப்பதைக் கண்ட முதலாளி, ஆட்களைவிட்டுத்தனியே கல்லைப் பொறுக்கச் சொல்ல 50 மூட்டை கல் இருந்தது. அதைக் கண்டு ஆரம் பத்திலிருந்து விற்றபயறில் பாதி கல் உள்ளதாக மதிப்பிட்டு முதலாளி வியாபாரிக்கு தண்டனையாக அன்று வந்தபயறை எடுத்துக்கொண்டுஅவன் தந்தை தேடிய வீடு நிலங்களையும் எடுத்துக்கொண்டதுடன் மீதிக்கு கடன் பத்திரம் எழுதிக் கொடுக்கும்படியும் பணித்தான். ஆகவே வியாபாரி முன்னிலும் பெரிய ஏழை ஆனான். இதனால் வறுமை நீங்கக் கொடியச் செயல்களைச் செய்தல் கூடாது என்பது விளங்கும்.

**(17) இலன்என்று தீயவை செய்யற்க; செய்யின்**
**இலன் ஆகும் மற்றும் பெயர்த்து.**

(பதவுரை.) இலன் என்று – (யான்)வறியவன் என்று நினைத்து, தீயவை – (அவ்வறுமை நீங்கப் பிறர்க்குக்) கொடிய செயல்களை, செய்யற்க – (ஒருவன்) செய்யாது இருக்கக் கடவன், செய்யின் - அவ்விதம் செய்தான் ஆனால், பெயர்த்தும் – மறுபடியும், இலன் ஆகும் - வறிய வன் ஆவான்.

(கருத்து.) வறுமையை நீக்கப் பொருளை விரும்பித் தீவினை செய்தல் ஆகாது.

(கேள்வி.) பொருளை விரும்பிப் பிறர்க்குத் துன்பம் செய்தவர் யாதடைவர்?

---

## ஒப்புர வறிதல்

ஒப்புரவு = உலகநடை.

1754. ம் வருஷத்தில் விசுவநாத முதலியாருக் குப் பச்சையப்பமுதலியார் புதல்வராய்த் தோன்றி னார். தோன்றியபொழுது தந்தைஇல்லை. மிகவும் வறுமை. இதனால் இவர் தாய் பூச்சிஅம்மாள் காலங்

கழிக்கும் பொருட்டு சென்னை சென்றாள். அங்குப் போய்ப்படித்து, துவிபாஷியாகவும், திவானாகவும் தொழில் செய்யும் திறமையை இவர் பெற்றார். இத் திறமையைக்கண்டு செல்வமகள் தானே சென்று இவரிடம் தங்கினாள். இவர் தம்மிடம் உள்ள செல்வத்தை, ஊர் நடுவில் உள்ள மரத்தில் பழுத்தபழம், பலர் பசியை நீக்கப்பயன்படுவதுபோல, காசிமுதல் இராமேசுரம் வரையில் உள்ள ஊர்களின் நடுவில் உள்ள, கோயிலில் செய்யும் உணவுக்குக் கொடுத்து அவ்வுணவைப் பலரும் வாங்கி உண்டு அவர்கள் பசியைப் போக்கிக்கொள்ளப் பயன் படுத்தினார். இதனால் இவர் செல்வம் எல்லார்க்கும் பயன்படுகிறது.

**(18) பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால், செல்வம்
நயன் உடையான் கண்படின்.**

(பதவுரை.) செல்வம் - பொருள்கள், நயனுடையான் கண் - உலக நடையை அறிந்து உதவுபவன் இடத்தில், படின் - உண்டானால், பயன் மரம் -(அப் பொருள் ) உண்ணப் பயனுள்ள கனி நிறைந்த மரம், ஊர் உள் - ஊரின் நடுவே, பழுத்தற்று - பழுத்தாற் போலும்.

(கருத்து.) உலக நடை அறிந்து உதவுபவன் இடத்துள்ள செல்வம் யாவர்க்கும் பயன் படும்.

(கேள்வி.) எவர் இடத்தில் உள்ள செல்வம் பயன் மரம் பழுத்ததற்கு ஒப்பாகும் ?

---

## ஈகை

பணம் இல்லாதவர் பிணம் என்றகருத்தை எண்ணி, ஒருசெல்வர் தம் இளமைமுதல் வயோதிகம் வரை சம்பாதித்த செல்வம் யாவற்றையும் சேர்த்து வைத்திருந்தனர். யாசகர் தானம் கேட்கச் சென்றால் கதவைத்தாளிட்டு விடுவார். இவ்விதம் தானமீ கொடாமலும் தாம் உண்ணாமலும்

உடுக்காமலும் தாம் சேர்த்த அனைத்தையும் ஆயிரம்ரூபாய் நோட்டாக மாற்றிப் பாதுகாப்பாக வைத்திருந்தார். இவரது அன்பர்கள் ஏழைக்குக் கொடுங்கள். அவ்வேழைகளின் முகமலர்ச்சியைப் பாருங்கள். அப்போது உங்களுக்கு செலவிடாது பொருளை வைத்திருப்பதைக் காட்டிலும் எவ்வளவு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது பாருங்கள் என்பார் கள். எவ்வளவு சொல்லியும் அவர்மனம் இளகவில்லை. சிறிதுநாள் சென்றது. 1000ரூபா நோட்டு செல்லாது என்று அரசியலார் அறிவித்தனர். இதைக்கண்டு. நாம் உண்ணுதும் உடுக்காதும் எவ்விதபயனையும் அனுபவியாது தேடிய செல்வத்தை இழந்தோமே பிறர்க்கும் அளிக்காத பாவியானேமே என்று சொல்லிக்கொண்டே கீழே விழுந்தவர் மாண்டார். இதனல் தேடியபொருளைத்தாமும் உண்டு பிறர்க் கும் கொடுப்பவரே மேலானவர்.

(19) ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் : தாம் உடைமை
வைத்து இழக்கும் வண்கணவர்.

(பதவுரை.) தாம் உடைமை-தம்முடைய செல்வத்தை, வைத்து இழக்கும் - (கொடுக்காது) புதைத்து வைத்துப் பின் தனக்கும் பயனில்லாமல் அழிந்துபோகும், வன் கணவர் - கருணையில்லாத கொடுமை யாளர், ஈத்து உவக்கும் - (ஏழைக்குக்)கொடுத்து அவர் மகிழ்ச்சியால் கொடையாளர் அடையும், இன்பம் அறியார் கொல் - மகிழ்ச்சியைப் பார்த்து அறியார்போலும்.

(கருத்து.) பொருள் சேர்க்கும் இன்பத்தைவிடப் பெற்றபொருளால் ஏழை மகிழும் இன்பத்தைக்கண்டு மகிழ்தலே மேலானது.

(கேள்வி.) வைத்திழக்கும் வண்கணவர் எந்த இன் பத்தை அறியார்?

---

## புகழ்

விவேகானந்தருக்கு வயது ஆறு. அவர் தந்தையார் விலையுயர்ந்த ஓர் ஆடைவாங்கிக் கொடுத்தார். அதை அவர் கழுத்தில் போட்டுக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு சன்னியாசி அவர் வீட்டு வாசலில் நின்று பிச்சை கேட்டார் அவருக்கு ஆடை இல்லை. கோவணம் உடுத்திருந்தார் இதைக் கண்ட இக்குழந்தை அவரிடம் போய் உனக்கு கட்டிக்கொள்ள வேட்டியில்லையா! இதைக் கட்டிக்கொள் என்று தன் கழுத்தில் போட்டிருந்த ஆடையை எடுத்துக் கொடுத்தது. வாங்கிய அவர் நீயே தருமதேவதை என்று அக்குழந்தையைப் புகழ்ந்தார். பெற்றோர்களும் மற்றவர்களும் இச் செயலைக்கண்டு புகழ்ந்தார்கள்.

(20) ஈதல், இசைபட வாழ்தல், அது அல்லது
ஊதியம் இல்லை ; உயிர்க்கு.

(பதவுரை.) ஈதல் – (ஒருவன்) ஏழைக்குக் கொடுத்தலால் உண்டாகும், இசைபடவாழ்தல் – புகழ் உண்டாக வாழ்க, அது அல்லது - அப்புகழ் அல்லாமல், உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, ஊதியம் இல்லை - பயன்தருவது வேறு ஒன்றும் இல்லை.

(கருத்து.) ஏழைக்குக் கொடுத்தலால் வரும்புகழே உயிரோடு சேரும் பயன் ஆகும்.

(கேள்வி.) உயிர்க்கு ஊதியமாக உள்ளது எது?

---

## கூடா வொழுக்கம்

பத்திரகிரியார் என்ற அரசர் தென்னாட்டை ஆண்டு வந்தார். அவர் பிறவுயிரைத் தம்உயிர் போல் எண்ணி ஆட்சிசெய்தார். அவர்காலத்தில் வாழ்ந்தவர் பட்டினத்தார். இவர் விநாயகர் அருகில் இருந்து தவம்செய்தார். அதுசமயம் திருடர்கள் தங்களுக்

குக்கிடைத்த ஆபரணங்களில் ஒரு முத்துமாலையை விநாயகருக்குப் போட்டார்கள். அச்சத்தோடும் அவசரத்தோடும்போட்டதால் அம்மாலை அருகில்தவம் செய்தவர் கழுத்தில் விழுந்தது. திருட்டைக்கண்டு பிடிக்கச்சென்ற தூதரும் முத்துமாலை இருந்த இத்தவசியை அரசனிடம் கொண்டு சென்றூர்கள். திருடினமாலையுடன் அவர் இருக்கக்கண்டு மன்னரும் அத்தவசியை கழுவில் இடஉத்திரவிட்டார். கழுவில் ஏற்றப்போகும்போது கழுமரம் பற்றி எரிந்தது, இதைக்கேட்ட அரசர் தான் செய்த தீமைக்காகத் தன்மனம் மிகவருந்திப் புலம்பினர். பின் இவ்வரசவேஷம் தரித்திருப்பதால் பயனில்லை என்று அத்தவசிக்கு அடிமையாகச்சென்று வாழலானூர்.

(21) வான் உயர் தோற்றம் எவன்செய்யும்; தன்நெஞ்சம்
தான் அறி குற்றப் படின்.

(பதவுரை.) தான் அறிகுற்றம் - (ஒருவன்) தான் தீமை என்று தெரிந்த, தன்நெஞ்சம் படின் - (அத்தீமைக்குத்) தன்மனம் வருத்தப்படுமானல், வான் உயர் தோற்றம் - ஆகாயத்தைப்போல் மேலாக (அவன் செய்து கொள்ளும்) வெளிவேஷம், எவன் செய்யும் - (அவனுக்கு)என்ன பயனைத் தரும்?

(கருத்து.) மனக்குற்றம் உடையவர் வெளிவேஷத்தால் பயனில்லை.

(கேள்வி.)எவரது தோற்றம் பயனில்லை?

---

## கள்ளாமை

சேரநாட்டை ஆண்ட நெடுஞ்சேரலாதன்கொலுவீற்றிருந்தான். அவனும் அவன் புதல்வராகிய சேரன் செங்குட்டுவனும் இளங்கோவும் கூடஇருந்தனர். அதுசமயம் சோதிடம் சொல்லும் நிமித்திகன் வந்து வணங்கி அரசே; உங்கள் அருகில் இருக்கும் இளங்கோவே அரசாளுதற்குரியவர் என்றூன்

அரசன் மூத்தவன் அரசாளும் முறை இருக்க இளையவன் எவ்விதம் ஆள்வான்? என்று கேட்க, இந்த அரசையே ஆளலாம் அல்லது பிறஅரசையாவது வென்று ஆளலாம் என்றான் சோஸ்யன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த இளங்கோ, தந்தையை நோக்கி அப்பா! ஒன்று "நான் அண்ணன்உரிமையைப் பெறலாம், அல்லது பிறஅரசைப் பெறலாம் என்ற எண்ணமே என்மனத்தில் நிறைந்திருக்கும். அவ்வித வஞ்சனையான எண்ணத்தை மனதில் நினைத்தலும் குற்றமே ஆகும்," என்று அப்போதே துறவியாகி இளங்கோவடிகள் என்ற பட்டமும் பெற்றார்.

(22) உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

(பதவுரை) பிறன் பொருளை - வேறு ஒருவன் செல்வத்தை, கள்ளத்தால் - (அவன் அறியாமல்) வஞ்சகத்தால், கள்வேம் எனல் - வஞ்சித்து அடைவோம் என்று எண்ணுது ஒழிக, உள்ளத்தால் - (அவ்வஞ்சனையை ஒருவன் தன்)மனத்தால், உள்ளலும் - நினைத்தலும், தீதே - குற்றம் உடையதே ஆகும்.

(கருத்து.) பிறன் பொருளை வஞ்சனையால் அடைவோம் என்று மனதில் நினைத்தலும் குற்றம் ஆகும்.

(கேள்வி.) மனதில் எதை நினைத்தலும் தவறுகும்?

---

## வாய்மை

அயோத்தியை ஆண்ட அரசர் தசரதர். ஒரு சமயம் அவருக்கு ஒன்று தன் மனைவிக்கு அளித்த வாக்கை இல்லை என்ற பொய் இருட்டை உண்டாக்க வேண்டும்; அல்லது அரசைப் பரதனுக்கு அளித்து இராமனைக் காட்டிற்கு அனுப்ப வேண்டும், என்ற நெருக்கடியான சமயம் வந்தது. அப்போது அவர், சூரியன், சந்திரன் இல்லாத காலங்களில் வேறொரு விளக்கைக் கொண்டு இருட்டைப் போக்கலாம்; ஆனால் பொய் இருட்டை எந்த விளக்கும் போக்

காதே? என்று நினைத்து, தம்முயிரையே கொடுத்து சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் முதலிய எல்லா ஒளி செய்யும் விளக்கிலும் மேலான விளக்காகிய உண்மை விளக்கை ஏற்றிச் சென்றார். இவ்வுண்மைவிளக்கிற்கு ஏனைய எல்லா விளக்கும் ஒப்பாகா, என்று வள்ளுவரும் விளக்கமாகக் கூறியுள்ளார்,

(23) எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யாவிளக்கே விளக்கு.

(பதவுரை.) எல்லா விளக்கும் - உலகத்தார் இருட்டை நீக்கும் சூரியன் முதலிய விளக்குக்கள் யாவும், விளக்கு அல்ல - விளக்கு ஆகா, சான்றோர்க்கு - அறிவு நிறைந்த பெரியோர்களுக்கு, விளக்கு - விளக்கு ஆவது, பொய்யாவிளக்கே-(நெஞ்சு இருளை நீக்கும்) பொய் கூறாமை ஆகிய விளக்கே ஆகும்.

(கருத்து.) சூரியனை விடப் பொய் கூறாமையாகிய விளக்கே மேலானது.

(கேள்வி.) சான்றோர்க்கு விளக்காவது எது?

---

## வெகுளாமை

வெகுளல்=கோபித்தல்

இலங்கையில் உள்ள அசோகவனத்தை அழித்த அனுமான்மீது இராவணன் கோபங்கொண்டபொழுது வீபீஷணன் சென்று, தூதர்மேல் கோபங் கொள்ளலாகாது என்று தடுத்துச்சொன்னான். இராவணன் கேட்காமல், இக்குரங்கு என்னசெய்யும்? என்று இறுமாப்போடு வாலில் துணிசுத்தி நெருப்பை வைக்கச் சொன்னான். அந்நெருப்பு அவன் நகரைச்சுட்டு அழித்ததோடு. அதன்காரணமாகவே முடிவில் அவனும் எல்லாவல்லமையும் இழந்து இறக்கநேரிட்டது. இதனால் நம்மிலும் கேவலமான உயிர்தானே! நம்மை என்னசெய்யும்? என்று எவ்வளவு தாழ்ந்த உயிர்களிடத்திலும் நாம்கோபம் கொள்ளலாகாது. கொண்டால் அக்கோபமே நம்

146990

மைப் பலவகைக் குற்றத்திற்கு ஆளாக்கி ஆழ்த்து விடும்.

(24) மறத்தல் வெகுளியை யார் மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

(பதவுரை.) யார்மாட்டும் - எப்படிப்பட்டவர் இடத்திலும், வெகுளியை - கோபத்தைச், மறத்தல் - (செய்யாமல்) விட்டுவிடுக, தீயபிறத்தல் - (ஒருவருக்குக்) குற்றம் யாவும் உண்டாதல், அதனான்வரும் - அக்கோபத்தால் உண்டாகும்.

(கருத்து.) எவரிடத்திலும் கோபத்தைக் கொள்ளலாகாது.

(கேள்வி.) கோபம் உள்ளவர் அடையும் கேடு யாது?

---

## இன்னாசெய்யாமை

### இன்னா = துன்பங்கள்

முருகன் ஒருநாள் காலையில் கூண்டில் அகப்பட்ட எலியின் வாலில் கயிற்றைக் கட்டித் தன் வீட்டின் வெளியே உள்ள சாக்கடைத் தொட்டி நீரில் அதைப் போட்டுப்போட்டுத் தூக்கி விளையாடி, அது களைப்படைந்த உடன் அதைவிட்டெறிந்தான். சற்று நேரம் கழித்துப் பகல் 10.மணிக்கு ஆற்றிற்குக் குளிக்கச்சென்றான். இவனுக்கு நீந்துதல் தெரியாது. நீந்திப்பழக்கமுள்ளவர் ஆற்றின் நடுவில் நின்று நீந்தி விளையாடுவதைக் கண்டு இவனும் அங்கே சென்றான். தண்ணீர் அழுத்தி அழுத்தித் தூக்கியது. அருகிருந்தவர் இவன் மயிரைப் பிடித்துத்தூக்க, இவன் அழுந்தி அழுந்தி மேலே வந்து, மயங்கியவனாய்க் கரையில் தூக்கிப் போடப்பட்டான். சிறிது அறிவு வந்தவுடன் "நாம் காலையில் எலிக்குச் செய்ததுன்பம் அவ் எலியால் அல்லாமல் அத்துன்பமே வந்து நமக்கு இவ்வித ஆபத்தை உண்டாக்கியதென்று அதுமுதல் பிறஉயிர்களுக்குத் துன்பம் செய்வதையே மறந்தான்.

(25) பிறர்க்கு இன்னு முற்பகல் செய்யின்; தமக்கு இன்னு
பிற்பகல் தாமே வரும்.

(பதவுரை.) பிறர்க்கு இன்னு - அயலார்க்குத் துன்பங்களை, முற்பகல் செய்யின் - (ஒருவன்) காலைவேளையில் செய்தானுயின், தமக்கு இன்னு - அத்துன்பம் செய்தவனுக்குத் துன்பங்கள், பிற்பகல் - மாலைவேளையில், தாமே - (துன்பம் அடைந்தவரால் அன்றி) அத்துன்பங்கள் தாமாகவே, வரும் - வந்துசேரும்.

(கருத்து.) பிறர்க்கு நாம் செய்ததுன்பமே. பின் நமக்குத் துன்பமாக வரும்.

(கேள்வி.) நாம் பிறர்க்குச் செய்யும் துன்பம் யாது ஆகும்?

---

## இறைமாட்சி

இந்தியா சுதந்தர அரசைப் பெற்றது. இச்சமயத்தில் மக்கள் மதுவிலக்கு. 2-10-48. இல் அமுலுக்குக்கொண்டு வந்தார்கள். இதனுல் உண்டான பெருவாரியான நஷ்டத்திற்குப் பயப்படாமையும், இவ்வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கு வேறு வேலை கொடுத்து உதவும் கொடையும், இதனுல் நஷ்டமாகும் பணத்திற்கு ஒழுக்க வழியில் தேடும் அறிவும், அதற்கான முயற்சியும் இடைவிடாது வளர்ந்து கொண்டே இருப்பதால் குடிஎன்னும் அரக்கனை நம்நாட்டைடையே விட்டு அகற்றி விட்டார்கள். இவ்விதம் பயப்படாமையும், கொடுத்தலும், அறிவும், முயற்சியும் ஆகிய இந் நான்கு குணங்களுமே நாட்டை ஆளும் மக்களுக்கு வேண்டும் என்று வள்ளுவர் கூறினர்.

(26) அஞ்சாமை, ஈகை, அறிவு: ஊக்கம், இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு.

(பதவுரை.) வேந்தர்க்கு, இயல்பு - அரசர்க்குரிய தன்மையாவது, அஞ்சாமை, ஈகை, - பயப்படாமையும், கொடுத்தலும், அறிவு, ஊக்கம் - புத்தியும், முயற்சியும் ஆகிய, இந்நான்கும் - இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை - இடைவிடாது இருத்தல் ஆகும்.

(கருத்து.) அரசர்க்கு, ஆண்மை, ஈகை, அறிவு, முயற்சி ஆகிய இவை அமைதல்வேண்டும்.

(கேள்வி.) அரசர்க்கு இயல்பாக அமைய வேண்டிய நான்கு குணங்கள் எவை?

---

## கல்வி

புகைவண்டியில். (ரயில்) பிரயாணம் செய்யும் ஒருவர் அவ்வண்டி அசையும் போது தான் கீழே விழாமல் இருக்க மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கைப்பிடியைப் பலமாக பிடித்தார். அப்பிடிப்பால் வண்டி நின்றுவிட ஒட்டுபவர் வந்து இப் பெட்டியில் யார் கைப்பிடியை இழுத்தது? என்ன அபாயம் வந்தது? என்று கேட்டார். அப்போதும் அவர் அதைப் பிடித்துக் கொண்டே வண்டி சிறிது ஆடிற்று. விழாமலிருக்க இப்பிடியைப் பிடித்தேன் என்றார். அதற்கா பிடிப்பது? நீர் செய்தது தவறு. 50. ரூபா அபராதம் இதோ எழுதி இருக்கிறது பாரும என்றார். எழுதியிருந்தும் தெரியாத கண்ணே, எனக்கு அபராதம் அளித்தது என்று அபராதத் தொகையைக் கட்டினார். இதைக் கண்ட அனைவரும் எழுத்தைக் கற்காத இவர் கண் இருந்தும் பயனில்லாமல் குருடர் ஆனார் என்று இழிவாகப் பேசினார்கள். மேலும் அக்கண்ணே ரணம் போல் தொந்தரவான அபராதத்தையும் அளித்தது என்றார்கள்.

(27) கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

கண்ணுடையவர் - விழியுடைவர், என்பவர் - என்று மேலாகச் சொல்லப் படுபவர், கற்றோர் - படித்தவரே ஆவர், கல்லாதவர் - படிக்காதவர், முகத்து - முகத்தின் இடத்தில், இரண்டு புண்ணுடையர் - இரண்டு ரணங்களை உடைய குருடர்.

(கருத்து.) படித்தவர் விழியுடையவர். படிக்காதவர் குருடர்.

(கேள்வி.) முகத்தில் கண்ணையும், புண்ணையும் உடையவர் எவரெவர்?

---

## கல்வி

இராவணன் பாடும் இசையில் வல்லவன். அவன் இசையில்வல்ல நாரதர் முதலிய அனைவரையும் வென்றான். வெற்றிக்கு அடையாளமாகத் தன் கொடியிலும் வீணையை எழுதி வீணைக்கொடியோன் என்ற புகழும் பெற்றான். இவன் முனிவர்க்கரசரா கிய அகத்தியரிடம் பாடி, அவரையும் தோற்கடிக்க எண்ணி, அவர் இருப்பிடம் சென்று அவரைவாதுக் கழைத்தான். அவரும் உடன் பட்டார். பின் அவர், ஒரு வீணையை எடுத்து வாசிக்க அருகில் உள்ள கல் இளகியது. அவ்வீணையை அதில் வைத்தார். ஒட்டிக்கொண்டது. இராவணா! முதலில் இவ்வீணையை எடு; பின் பாடலாம் என்றார். வீணையை அசைத்துஅசைத்துப் பார்த்தும் அது அசையவில்லை. அப்போது அகத்தியர், இராவணா! கிணறுள் இருக்கும் மணலைத் தோண்டத்தோண்ட நீர் வருதல்போல படிக்கப் படிக்க அறிவு வளரும். நீ இன்னும் இத்தன்மையான கல்வியைக் கற்கவில்லை. அதனால் மேலும் கற்று அதன்பின் வா! என்று அவனுக்கு விடைகொடுத்தனுப்பினார்.

(28) **தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்கு**
**கற்றனைத்து ஊறும் அறிவு.**

(பதவுரை.) மணற்கேணி - மணல் இடத்தில் உள்ள கிணறு, தொட்ட அனைத்து - தோண்டிய அளவாக, ஊறும் - (நீர்) சுரக்கும், (அதுபோல). கற்ற அனைத்து - படித்த அளவாக, மாந்தர்க்கு அறிவு - மக்களுக்குப் புத்தி, ஊறும் - (மிகுதியாக) வளரும்.

((கருத்து.) சிறிது கற்றல் போதாது என்று மேலும் மேலும் கற்றல் வேண்டும்.

(கேள்வி.) மக்களுக்கு அறிவு உண்டாகச் செய்ய வேண்டியது யாது?

---

## கல்லாமை

மதுரையில் உள்ள கடைச்சங்கத்திற்குத் தலைமை வகித்தவர் நக்கீரர், அவர், கடவுள் இயல்புநூல்களைக் கல்லாமல், தருமி என்பவனிடம் இறைவர் பாடி அளித்த பாடலைத் தவறு என்றார். அதுகேட்ட இறைவர், நேரே வந்து, கற்புடைய மகளிர் கூந்தலுக்கு இயற்கைவாசனை உண்டு என்றுசொல்லியும், அந்நூல்களை இவர் கல்லாமையால் மறுத்தார். நெற்றிக்கண்ணை இறைவர் காட்டியும் மறுத்தார். இதனால் அவரோடு கூடிய சங்கப்புலவர் இருந்த பலகையும் அழிய அவரும் நோய் அடைந்துதன் பதவியையும் இழந்தார். அப்போது தான் சொக்கட்டான் காயைச் சுற்றுக்கோடுபோடாமல் விளையாடினாற்போல கடவுள் இயல்பு நூலைக்கற்காமல் சபையில் பேசினேமோ என்று வருந்திப் பின் முருகப் பெருமானிடம் படித்து மீண்டும் தம் பதவியை அடைந்தார். எல்லாநூல்களையும் கற்றே சபையில் பேச ஆசைப் படவேண்டும் என்று வள்ளுவரும் கூறினார்.

(29) அரங்கின்றி வட்டாடி அற்றே; நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்.

(பதவுரை.) நிரம்பிய – (ஒருவன் அறிவு) மிகுதற்குக் காரணமாகிய, நூல்இன்றி – நூல்களைப்படிக்காமல், கோட்டிகொளல் – சபையில்பேச ஆசைப்படுதல், அரங்கு இன்றி – சதுரக்கோடு போடாமல், வட்டு – சொக்கட்டான் காயை, ஆடி அற்றே – விளையாடினாற்போலும்.

(கருத்து.) நிறையக்கற்றபின் சபையில்பேசவேண்டும்.

(கேள்வி.) சதுரக்கோடு இல்லாமல் விளையாடிய விளையாட்டத்தை ஒப்பது எது?

---

## கேள்வி

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் ஒரு சமையல் காரர் இருந்தார். அவர் ஊர் இராமநாதபுரம். எழுத்து வாசனையே கிடையாது. எப்பொழுதும் அவருக்கு சமையல்வேலை இருக்கும். ஆயினும், பிள்ளை அவர்கள் குடிக்க வெந்நீர் கேட்பார்கள். கொண்டுவந்து கொடுத்துப் பிள்ளைசொல்லும் சிலசொற்களைக் கேட்பது வழக்கம். ஒரு நாள் பிள்ளை அவர்கள் மாணவர்க்கு வடமொழியில் ஒரு பொருள் இருபொருள் பலபொருள், என்ற எண் உண்டு. அவற்றிற்குப்பெயர் ஒருமை, இருமை,பன்மை, என்பதாகும் என்று போதித்ததைக் கேட்டு நினைவில் வைத்துக் கொண்டார். இப்படிப் பல கருத்தை அறிந்தார் இவர். பின் உடல் நோய் காரணத்தால் தன்னூரை அடைந்து அவ்வூர் அரசரிடம் காவல் வேலைபார்த்தார், அப்போது அங்கு வந்த ஒரு புலவருக்கு எண்ணை தேய்க்க அனுப்பிய ஆளிடம் அப்புலவர், இராமநாதபுரம் அரசரிடம்

போய்ச் சொல் "எனக்கு எண்ணை தேய்க்க இரு கை போதாது;" என்றார். இதை ஆள் அரசரிடம் வந்து சொல்ல, அரசர் கலங்கினார்! இருகை போதாதென்றால் நான்கு கை வேண்டுமா? என்று ஆராய்ந்தார். அப்போது காவல் காத்தவர் அரசே? ஏன் கலக்கம் இரண்டிற்கு மேற்பட்டது பல, இருகை போதாதென்றால் பலகை வேண்டும் என்கிறார் என்றார். இதைக்கேட்ட அரசர் வியந்து புலவருக்குப் பலகை அனுப்பிவிட்டு அக்காவல் காத்தவர் அறிவு அடைந்த வரலாற்றை அறிந்து பின் தன் புலவர்களில் ஒருவராக, அவரை வைத்துக் கொண்டார்.

(30) எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்.

(பதவுரை.) எனைத்தானும் - (ஒருவன்) மிகச்சிறிதானாலும், நல்லவை - அறம், பொருள், இன்பம் தரும் சொற்களை, கேட்க - கேட்டல்வேண்டும், அனைத்தானும் - அவ்வளவு சிறிதாயினும், ஆன்ற பெருமை தரும் - (கேட்டஅவனுக்கு) மிகுந்த உயர்வை அளிக்கும்.

(கருத்து.) சிறிது என்று இகழாது. நன்மொழியைக் கேட்டல் வேண்டும்.

(கேள்வி.) ஒருவனுக்கு ஆன்ற பெருமையை அளிப்பது எது?

---

## அறிவுடைமை

எட்டயபுரம் சமஸ்தான வித்துவானாக விளங்கியவர், சுப்பிரமணிய பாரதியார். இவர், சுமார் 50 வருஷத்திற்கு முன்னமே (எதிர்காலத்தில்) 50 வருடத்திற்குப் பின் கிடைக்கும் அனுபவத்தைப் பாடினார்.

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு
நாம் எல்லோரும் சமம் என்பதுறுதி ஆச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்
தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே. —இது ஆகும்.

இப்பாடலைக்கேட்டு எதிர்காலத்தில் வருவதை முன்னால் ஊகித்துத் தெரிந்துகொள்ளாதமக்கள் இவரைப் பலவாறு இழித்துப் பேசிப்பலவிததுன்பப் படுத்தினார்கள். சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் சுதந்திரம் பெற்ற அன்று இவர் எவ்வளவு முன்னமே நம் நிலைமையைப் பாடினார் என்று புகழ்ந்து இவர் இப்போது இல்லையே என்று வாடினார்கள். அன்று, இவர் இல்லாவிட்டாலும் இவர் பாடிய பாடலையே ஒவ்வொருவரும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்கள். வானொலியிலும் இவர் பாடலே பாடப்பட்டது. இவ்விதம் எதிர்காலத்தில் வருவதை அறிந்து சொல்லக்கூடியவர்களே அறிவுள்ளவர்கள் என்று போற்றுதற்குறியவர்கள். இவர் பாடாவிட்டால் அன்று பாடவும் முடியாது.

(31) அறிவுடையார் ஆவது அறிவார் ; அறிவிலார்
அஃது அறி கல்லா தவர்.

(பதவுரை.) அறிவுடையார் - புத்தியுள்ளவர், ஆவது- எதிர் காலத்தில் வருவதை, அறிவார் - முன்னமே ஆராய்ந்து அறிந்து கொள்வார், அறிவிலார் - புத்தியில் லாதவர், அஃது - அவ்விதம் எதிர்காலத்தில் வருவதை, அறிகல்லாதவர் - முன்னால் ஊகித்துத் தெரிந்து கொள்ள மாட்டார்.

(கருத்து.) அறிவுள்ளவர் எதிர்காலத்தில் நடப்பதை அறிவார்.

(கேள்வி.) எதிர் காலத்தில் வருவதை அறிபவர் எவர்?

## குற்றங் கடிதல்.

விஜய நகரை ஆண்ட கிருஷ்ணதேவராயருக்குத் துணையாய் இருந்து அரசியலை நடத்தினவர் விசுவநாத நாயகர். இவர் தன் தந்தை நாகமநாயகரை மதுரையை ஆளும்படி அனுப்பினார். இவர் அம் மதுரைமக்களுக்குப் பல கொடுமைகளைச் செய்து துன்புறுத்தினார். இதை அந்நாட்டு மக்கள் விஜயபுரி மன்னரிடம்வந்து சொன்னார்கள். அதைக்கேட்டு மன்னர்கலங் கினார். அருகில் இருந்த அவர் மகனார் "என் தந்தை குற்றம் செய்வாரானால் அவர் பிறர் குற்றத்தை நீக்கும் அரசராக எவ்வாறு வாழமுடியும்? அதனால் விடைகொடுங்கள்" என்று அரசரிடம் சொல்லிப்புறப்பட்டுப்போய்த்தன் தந்தையை அடக்கி அனுப்பிவிட்டுத் தானே அந்நாட்டு மக்கள் வியக்கும் படியாக அந்நாட்டை ஆண்டு வந்தார். இதனால் தன் குற்றம் இல்லாதவரே பிறர்குற்றத்தைக் கண்டு கண்டிக்கத்தகுதியுடையவர். இவரே மதிப்புடையவர் ஆவர் என்று வள்ளுவரும் கூறினார்.

32. தன்குற்றம் நீக்கிப்பின் பிறர் குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு

(பதவுரை.) தன் குற்றம் நீக்கி - (முன்னால்) தன் தவறைக் கண்டு விலக்கி, பிறர்குற்றம் - (பின்பு) அயலாரது தவற்றை, காண்கிற்பின் - காணவல்லவன் ஆனால், இறைக்கு - அரசனுக்கு, ஆகும் குற்றம் என் - உண்டாகக் கூடிய தீமை யாதுஉண்டு (இல்லை).

(கருத்து.) தன் குற்றம் நீக்கி வாழ்பவனே பிறர் குற்றம் காண வல்லவன்.

(கேள்வி.) தீமை யின்றி வாழும் அரசன் என்ன செய்ய வேண்டும்?

## பெரியாரைத் துணைக்கோடல்

இலங்கை வேந்தனாகிய இராவணன் தம்பி விபீஷணன். இவன் தன் தமையன் அறிவில்லாமையைக் கண்டு தன்செல்வம் முதலிய யாவற்றையும் வெறுத்தான். அறிவு, குணம், ஒழுக்கம் முதலியவற்றில் மேலானவரைத்துணையாக அடையவேண்டும் என்று இராமனை அடைக்கலம் புகுந்தான். அவ்விராமன் சொல்லிய ஒழுக்கவழியில் நடந்தான், இதனால் அவனது அரசாக இன்றும் இலங்கை விளங்கிறது. இதனால், செல்வங்கள் யாவற்றிலும் சிறந்த செல்வம். 'நம்மைக் காட்டிலும் சிறந்த அறிவுள்ளவரை நமது சுற்றத்தவராக அடைந்து அவர் சொற்படி நடக்க வேண்டும்'' என்று வள்ளுவர் கூறினார்.

33. தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

(பதவுரை.) தம்மில் பெரியார் - அறிவு முதலிய வற்றில் தம்மைக்காட்டிலும் மேலானவர், தமர் ஆக - தமக்குச் சிறந்த உறவினராக, ஒழுகுதல் - தாம் அவர் சொல்லிய வழியில் நடத்தலே, வன்மையுள் எல்லாம் - வலிமை யாவற்றுள்ளும், தலை - முதன்மையான வலிமை ஆம்.

(கருத்து.) தம்மிலும் மேலோர் சொற்படி நடத்தலே நல்லது.

(கேள்வி.) வன்மையுள் எல்லாம் தலையாய வன்மை எது?

---

## சிற்றினம் சேராமை

செருக்கு, வஞ்சனை, பொறாமை முதலிய தீய குணங்கள் நிறைந்த பொக்கிஷமாக விளங்கினவன் துரியோதனன். அவனது சிறந்த தோழன் கர்ணன்

இவன் மனத்தில் தோன்றிய எண்ணங்கள் யாவும் நல்லனவே. ஈகையில் சிறந்த வள்ளல். அவ்வித சிறந்த உணர்ச்சியையுடையவனாயினும், இவன் சேர்ந்த இனத்தவர் பல தீய குணங்களையுடைமையால், அவர்கள் தீய செயல்களைச் செய்யும் போது, இவனும் உடன்பட்டு உதவியாக இருந்து தீமை செய்தான். இவன் புகழ் பெற்ற வள்ளலாயினும் தீயவர்களாகிய கௌரவர் இனத்தோடு சேர்க்கப் பட்டான். இதனால் வள்ளுவர். தான் சேரும் இனத்தை அறிந்து சேரவேண்டும் என்றார்.

**34. மனத்தான் ஆம், மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்
இன்னான் எனப்படுஞ் சொல்.**

(பதவுரை.) மாந்தர்க்கு உணர்ச்சி - மக்களுக்குப் பொது அறிவு, மனத்தான் ஆம் - தம் நெஞ்சு காரணமாக உண்டாகும், இன்னான் இன்ன தன்மையை உடையவன், எனப்படும் சொல் - என்று உலகத்தாரால் கூறப் படும் மொழி, இனத்தான் ஆம் - தாம் சேர்ந்த சேர்க்கையின் காரணமாக உண்டாம்.

(கருத்து.) ஒருவன் இயற்கை அறிவு தான் சேர்ந்த சேர்க்கை அறிவாக மாறும்.

(கேள்வி.) மாந்தர்க்கு இனமும், மனமும் உண்டாக்குவன எவை?

---

## வலியறிதல்

செஞ்சிக் கோட்டையை ஆண்ட அரசர் தேஜ் சிங்கு, இவர் ஷாஆலம்சக்கரவர்த்தியிடம் அடங்காக் குதிரையை அடக்கிப் பரிசு பெற்றார். இதைக் கேட்டும், இளமையில் இவரது பல வீரச் செயலைக் கேட்டும், இக் கோட்டையில் அருகில் ஆண்டு வந்த பாளையக்காரர் எல்லாம் இவர் மீது பகை கொண்

டனர். மேலும் தோடர்மால் என்ற மொகலாய அரசரின் தூதர் வந்தபோதும் தம் இளமை வீரத்தால் மதித்துப் பேசாமல் இழிவு படுத்தினர். இவற்றைக் கண்ட அமைச்சர்கள். உங்கள் வீரத்தால் எல்லோரையும் எளியர் என்று அவமதிக்கிறீர்கள் „நொய்மையான மயிலிறகை அதிகமாகச் சுமத்தினால் வலிமையுள்ள அச்சும் ஒடியும்'', என்று புத்திசொல்லிப் பகைக்கவேண்டாம் என்றூர்கள். அமைச்சர்கள் பேச்சைச் சிறிதும் மதிக்கவில்லை பலரை எளியர் என்று பகைகொண்டதால் இவர் தம் 22-ம் வயதிலேயே இறந்து அழிந்தார்.

35. பீலிபெய் சாகாடும் அச்சு இறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

(பதவுரை.) அப்பண்டம் – அம்மயில் இறகை, சால மிகுத்துப் பெயின் – (அவ்வண்டி தாங்கும்) அளவில்லாமல்) மிகவும் அதிகமாக ஏற்றினல், பீலிபெய் - இலேசான மயில் இறகை ஏற்றிய, சாகாடும் அச்சு இறும் - வண்டியில் உள்ள அச்சு ஒடியும்.

(கருத்து.) இலேசான மயிலிறகை அதிகமாக ஏற்றில் வலிமையான வண்டியின் அச்சு ஒடிதல்போல, எளியர் என்றும் பலருடன் பகைகொள்ளும் வலிய அரசன் அழிவான்.

உபமானம் :—இலேசான மயிலிறகு மிகுதியாக ஏற்றிய வண்டியின் அச்சு ஒடியும்.

உபமேயம் :—எளியர் என்று பலருடன் பகை கொள்ளும் வலிய அரசன் அழிவான்.

உபமானத்தின் மூலமாக உபமேயப் பொருளை அறியும்படி சொல்வது பிறிது மொழிதல் என்னும் அணி.

(கேள்வி.) (1) மிகுதியான மயிலிறகை ஏற்றியவண்டி அச்சு என்ன வாகும்?

(2) இந்த உபமானம் விளக்கும் கருத்துயாது?

## காலமறிதல்

சோழ நாட்டில் சிறந்த அரசனாக விளங்கினவன் கரிகாலன். இவனைச் சிறுவயதில் கொல்ல எண்ணி இவன் இருந்த மனையில் நெருப்பை வைத்தனர். இவனது காலும் கரிந்து கரிகாலன் என்று பெயர் பெற்றான். பின் கொக்கு அடங்கியிருப்பதைப் போல் இவன் தன் பகைவர்கள் அறிந்து கொள்ளாத முறையில் தன் மாமனாகிய இரும்பிடர்த்தலையார் மனையில் வாழ்ந்து வந்தான். அரசு ஏற்கும் காலம் வந்தவுடன் கொக்கின்குத்தைப்போல் தன் பகைவரை வென்றதுடன் இமயமலை வரை சென்று எல்லா அரசையும் வென்று புகழ்பெற்றான். ஆகும் காலம் அறிந்து தொழில் செய்பவரே வெற்றி அடைவர்.

36. கொக்கு ஒக்க ; கூம்பும் பருவத்து, மற்றதன்
 குத்து ஒக்க ; சீர்த்த இடத்து.

(பதவுரை.) கூம்பும் பருவத்து - தொழில் மேல் செல்லாதிருக்கும் காலத்தில், கொக்கு ஒக்க - கொக்கு உயிர் இல்லாதது இருக்குமாறு போல இருக்க, மற்றுச் சீர்த்த இடத்து - மேலும் தொழில் செய்யுங் காலம் பொருந்திய இடத்தில், அதன் குத்து ஒக்க - அக் கொக்குச் செய்து முடிப்பது போல தப்பாமல் செய்து முடிக்க.

(கருத்து.) இருப்பிலும், செயலிலும் கொக்கைப் போன்றவர் வெற்றி பெறுவர்.

(கேள்வி.) இருப்பிலும் செயலிலும் எதைப் போன்றவர் வெற்றி பெறுவர் ?

---

## இடனறிதல்

பாம்புக்குப்பகை கருடன் என்பது பழமொழி இப்பாம்பைத் தாருகாவன முனிவர்கள் சிவனைக் கொல்லக் கட்டளையிட்டுச் சிவன் மேல் ஏவினார்கள்.

அச்சிவன் அதை ஆபரணமாகத்தன் மேல் அணிந்து கொண்டார். தினமும் பாம்பணிந்தபரமனை அனைவரும் சுற்றிவருவது வழக்கம். ஒருநாள் கருடன் சுற்றி வரும்போது தலையில் உள்ள பாம்பு எழுந்து என்ன கருடா? சுகமா? என்றது. இச்சொல்லைக் கேட்ட கருடன், இருக்கும் இடத்தில் இருந்தால் சுகம் தெரியும் என்றது. இதுபோல் தண்ணீரில் இருக்கும் போது, இருக்கும் முதலைக்குள்ள வலிமை நிலத்திற்கு வந்தபோது இராது. இதனால் தன்னூரில் வலிமையாக வாழும் அரசர் பிற இடங்களிலும் இவ்வித வலிமை இருக்கும் என்று எண்ணுதல் தீமை தரும் என்று வள்ளுவர் கூறினார்.

37. **நெடும் புனலுள் வெல்லும் முதலை; அடும் புனலின் நீங்கின் அதனைப் பிற.**

(பதவுரை.) முதலை நெடும் புனலுள் - முதலை ஆழமான தண்ணீரின் கண்ணே, பிற வெல்லும் - ஏனையவற்றையெல்லாம் அழிக்கும், புனலின் நீங்கின் - அத்தண்ணீரில் இருந்து வெளி வந்தால், அதனை பிற அடும் - அம்முதலையை ஏனைய யாவும் அழிக்கும்,

(கருத்து.) நீரில் வலிமையோடு வாழும் முதலை நிலத்திற்கு வந்தால் பிற உயிர்களுக்கு எளிதாவது போல, தன்னூரில் வலிமையாக வாழும் ஒருவர் அயல் ஊர்க்குச் சென்றால் எளிது ஆவர்.

உபமானம்:—நீரில் வாழும்முதலை நிலத்திற்கு வந்தால் எளிதாகும்.

உபமேயம்:—தன்னூரில் வாழும் அரசர் வெளியூர் சென்றால் எளிதாவர்.

இப்பாடலில் வந்த உபமானம் உபமேயக் கருத்தை அறிவித்துக் கொண்டிருப்பதால் இது பிறிது மொழிதல் அணி.

(கேள்வி.) (1) பிற முதலையை எங்கு வெல்லும்?
(2) இவ்வுவமை விளக்கும் நீதி என்ன?

## தெரிந்து தெளிதல்

ஒரு செல்வன் தன்னிடம் உள்ள பதினாயிரம் ரூபாயைத்தான் இறக்கும் போது தன் இருபுதல்வர்களுக்கும் பிரித்துக் கொடுத்தான். மூத்தவன் தன் 5000 ரூபாயை வியாபாரப் பொருள்கள் வாங்கி விற்று மேலும் பெருஞ்செல்வனானான். இளையவன் தன் ரூபாயைக் குதிரைப் பந்தயம் முதலியனவைத்து யாவற்றையும் இழந்து வறியவனானான். பின் பலரிடம் சென்று பிச்சைகேட்கும் தொழிலைக்கொண்டு தன் பசியை நீங்கி வாழலானான். தங்கள் தந்தை வேறுபாடில்லாமல் கொடுத்தாலும் மூத்தவன் செய்ததொழிலால் உயர்வையும் இளையவன் செய்த தொழிலால் இழிவையும் அடைந்தார்கள் என்பவற்றை அவரவர்கள் செய்யும் தொழில்களே உரைக்கும்கல்லாக விளக்கிக்காட்டின.

38. பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும், தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

(பதவுரை.) பெருமைக்கும் - (மக்கள், பிறப்பு, குணம், அறிவு என்பவற்றால் எய்தும்) மேன்மைக்கும், ஏனைச் சிறுமைக்கும் - மற்றையதாகிய தாழ்மைக்கும், தத்தம் கருமமே - தாங்கள் தாங்கள் செய்யும் தொழிலே, கட்டளைக்கல் - உரைக்கும் கல்லாகும்.

(கருத்து.) பெருமையும், சிறுமையும் அவர் அவர் செய்யும் தொழிலால் உண்டாகும்.

(கேள்வி) மக்கள் செய்யும் தொழிலால் அறிவன எவை?

---

## சுற்றந் தழால்

தழால் = தழுவிக் கொள்ளல்

முதிரம் என்னும் மலைக்குத் தலைவன் குமணன். இவன் கொடுத்தலைக் கண்டு பொறாத இவன் தம்பி

அமணன் இவனைக் காட்டிற்குச் செல்லும்படி வேண்டினான். அவ்விதம் காட்டிற்சென்று இவன் வாழும் பொழுது பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் தம் வறுமையைப் போக்க இவன் மீது பாடிய பாடலோடு இவனை வந்து கண்டனர். அவருக்குக் கொடுக்க முடியாமைக்கு வருந்தி, தன் தலையை வெட்டிப்போய், தன் தம்பியிடம் கொடுத்துப் பொருள் வாங்கிச், செல்லும்படி தன் கையில் இருந்த வாளைக் கொடுத்தான். இதைக்கேட்ட புலவர் குமணன் தலைபோல் வேறொரு வெட்டின தலை செய்து இவன் தம்பியிடம் காட்ட, அவன் மனம் உருகி "அண்ணனை உயிரோடு அழைத்து வந்தால் மிக்க பொருள் தருவேன்" என்றான். புலவர் சென்று அழைத்து வந்து நேரில் காட்ட, அவன் தம்பி, இத்தனை துன்பம் செய்தும் என்னைச் சிறிதும் கோபிக்காமலும், தன்னிடம் ஒன்றும்இல்லாத காலத்துத் தலையைக் கொடுத்து உதவும் பெருங் கொடையும் உடைய பெரியோனை எனது அண்ணன்', என்று அரசை அவனை ஆளச்செய்து தானும் அவனுக்கு அடங்கி அன்போடு வாழலானான். புலவர்க்கு மிகுந்த பொருளை வழங்கினான்.

39. பெருங்கொடையான் பேணான் வெகுளி ; அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

(பதவுரை.) பெருங் கொடையான் - ஒருவன் மிகக் கொடுத்தல் உடையவனாய், வெகுளி பேணான்–கோபத்தை விரும்பாதவனும் ஆனால், அவனின் – அவனைக் காட்டிலும், மருங்கு உடையார் - கிளைஞரை உடையவர், மாநிலத்து இல் - இந்தப் பெரிய பூமியில் இல்லை.

(கருத்து.) சுற்றத்தவர் கோபமின்றிக் கொடுப்பவரையே சூழ்ந்து இருப்பர்.

(கேள்வி.) எத்தன்மை உடையவரை உறவினர் சூழ்ந்து இருப்பர்?

## போச்சாவாமை

பொச்சாவாமை=மறதி இல்லாமை

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சமணர்கள் ஆதிக்கம் தென்னாடு முழுதும் பரவியிருந்தது. பாண்டியன் நெடுமாறனும் இவர்கள் சொற்படி கேட்டு நடந்தான். இவற்றால் சிவாலயங்களில் ஒழுங்காகப் பூசைகள் நடைபெறவில்லை. இவற்றை மங்கையர்க்கரசியார் சிவாலயபூசையை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்று எண்ணினாள். இந்த எண்ணமே மேலும் மேலும் நினைத்து உரம் பெற்று வளர்ந்தது. இவ்வளர்ச்சியே "திருஞானசம்பந்தரைக் கொண்டு தன் கணவனுக்குச் சைவமதத்தின் பெருமைகளை விளங்கச் செய்து அவனையும் சைவனாக்கி, தென்னாட்டுச் சிவாலயங்களிலும் பூசையை ஒழுங்காகச்செய்யச் செய்தது. இவ்வம்மையாரின் மறவாத நினைவே எவராலும் முடியாத சீர்கேடான தென்னாட்டு அரசன் கருத்தை மாற்றியதோடு மக்கள் கருத்தையும் மாற்றிச் சிவாலய பூசையும் ஒழுங்கு பெறச் செய்தது.

40. அரிய என்று ஆகாத இல்லை ; பொச்சாவாக்
கருவியான் போற்றிச் செயின்.

(பதவுரை.) பொச்சாவாக் கருவியான்-(ஒருவர்) மறவாத நெஞ்சினால், போற்றிச் செயின் – நினைத்துச் செய்யப் பெற்றால், அரிய என்று - இவைசெய்தற்கு முடியாதன என்று சொல்லப்படும், ஆகாத இல்லை - முடியாத காரியங்கள் கிடையாது.

(கருத்து.) மறதி யில்லாமல் நினைப்பவர்எத் தொழிலையும் முடிப்பர்.

(கேள்வி.) முடியாத காரியத்தையும் முடிப்பவர் எவர்?

## செங்கோன்மை

அசோகர் முடிசூடிய எட்டாம் ஆண்டில் கலிங்கப்போர் நடந்தது. அதில் வெற்றி கிடைத்தது. கிடைத்த வெற்றிக்குப்பின் நடத்திய போரைப் பற்றி அவர் சிந்தித்தார். இப்போரில் ஒன்றரை லட்சம் வீரர் சிறை பிடிக்கப்பட்டனர்; ஒரு லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்; அளவற்ற உயிர்கள் மடிந்தன. "இவ்விதம் வெற்றியைத் தந்தது. என்னிடம் உள்ளவேல், அம்புகளா! இல்லை. என்னிடம் உள்ள நீதியே ஆகும்" அதனால், இவ்வித போர் வெற்றியை மறைவாய் இருந்து உண்டாக்கிய நீதியாகிய தர்ம வெற்றியே மேலானது என்று அன்று முதல் வேலையும் அம்பையும் மறந்தார். நீதியாகிய தர்ம வழியிலேயே மனதைச் செலுத்தி மக்களின் நன்மைக்கே பாடுபட்டார். இவைகளால் உலகை ஆண்ட அரசர் பலருள் இவரே மிகப் பிரசித்தி பெற்றவர் ஆனார்.

41. வேலன்று வென்றி தருவது; மன்னவன்
    கோல்அதூஉம் கோடாது எனின்.

(பதவுரை.) அதூஉம் - அந்தச் செங்கோலும், கோடாது எனின் - (அவ்வித வெற்றியைத் தருவது) தான் நீதி தவறாது இருக்குமானால், மன்னவன் - அரசனுக்கு, வென்றிதருவது - போர்இடத்தில் வெற்றியைக் கொடுப்பது, வேல் அன்று - அவ்வரசன் எறியும் அம்பு இல்லை, கோல் - செங்கோலே ஆகும்.

(கருத்து.) நீதி தவறாது நடத்தலே அரசனுக்கு வெற்றி ஆகும்.

(கேள்வி.) அரசனுக்கு வெற்றி தருவது எது?

## கொடுங்கோன்மை

கி. பி. 1325. முதல். 1351, வரை டில்லி நகரை முகமது துக்ளக் அரசு செய்தார். இவர் தன் தலை நகரான டில்லியை தேவகிரிக்கு மாற்றினதால் தங்கள் பிழைப்பை இழந்த மக்கள் இவரிடம் கோபங்கொண்டனர். கங்கை யமுனைப் பிரதேசத்தில் நிலவரியை அதிகம் செய்ததால் உழவர் பயிரிடுவதை மறந்து கொள்ளை அடிக்கும் தொழிலில் அமர்ந்தனர். செப்பு நாணயங்களை வெள்ளிநாணயங்களுக்குச் சமமாக ஒப்புக்கொள்ளவேண்டும் என்று உத்திரவிட்டதால் ஏழை மக்கள் பெரிதும் வருந்தினர். இவைகளால் மக்கள் "மழைபெய்யாது தவறுனல் எவ்விதம் நாம் பலவித துன்பங்களை அனுபவிக்கிருேமோ அது போல இவ்வரசர் கருணையில்லாமல் அரசு செய்வதால் பலவித கஷ்டங்களையும் அனுபவிக்கிருேமே'' என்று வருந்தினர்.

42. துளியின்மை ஞாலத்திற்குஎற்று, அற்றே; வேந்தன்
அளி இன்மை வாழும் உயிர்க்கு.

(பதவுரை.) துளி இன்மை–மழை இல்லாமை, ஞாலத்திற்கு - பூமியில் வாழும் உயிர்களுக்கு, எற்று – எல்லாத் துன்பமும் உண்டாக்குவதைப்போல, வேந்தன் – அரசன், அளி இன்மை – கருணையில்லாமல் இருந்தால், வாழும் உயிர்க்கு – அவன் நாட்டு வாழும் குடிகளுக்கு, அற்று – அவ்வாறே எல்லா வகைத்துன்பமும் உண்டாகும்.

(கருத்து.) கருணையில்லாத அரசன்கீழ் வாழும் மக்கள் துன்பம் அடைவர்.

(கேள்வி.) மழையின்மையும், அளியின்மையும் அளிப்பன எவை?

## ஊக்கமுடைமை

ஷாஜியின் இரண்டாவது மகன் சிவாஜீ. இக்குழந்தையைக் கொல்ல முகலாய சேனுதிபதி ஷீஜீபாயைச் சிறைப்படுத்தினர். ஆனுல் அவள் குழந்தை சிவாஜியை ஒளித்து வைத்து எதிரியின் கண்ணில் படாமல் காப்பாற்றினுள். இவள் கணவன் ஷாஜி வேருெரு மங்கையை மணம் செய்துகொண்டதால் வறுமையால் வாடி வாழ நேர்ந்தது. இவ்வாறு செல்வமில்லாது வளர்ந்த குழந்தை தன்மன ஊக்கத்தால் தானே அறிய வேண்டியவற்றை அறிந்தும் தாய் சொல்லிய சில கதைகளைக் கேட்டும் வல்லமையுடையாராகிப் போர் செய்த போது பூனு முதலிய நகரங்களை வறுமையில் வாழ்ந்த அச்சிவாஜிக்கு முகலாயர்கள் விட்டு விட்டார்கள். இதனுல் செல்வம் அழிந்துவிடும். செல்வமில்லா விட்டாலும் ஊக்கம் உள்ளவராய் இருந்தால் அவ்வூக்கம் அவர் விரும்பிய செல்வம் யாவற்றையும் தரும்

43. உள்ளம் உடைமை உடைமை ; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(பதவுரை.) உள்ளம் உடைமை – (ஒருவனுக்கு) ஊக்கமுடைமையே, உடைமை – (அழியாது நிலைபெற்ற) செல்வமாகும், பொருள் உடைமை - (ஏனைய) செல்வமுடைமை, நில்லாது - தங்கி நிலைத்திருக்காமல், நீங்கி விடும் · விலகிப்போகும்.

(கருத்து.) ஒருவனுக்கு அழியாத செல்வம் ஊக்கம் உடைமையே ஆகும்.

(கேள்வி.) ஒருவனுக்கு நிலைபெற்ற செல்வம் எது?

---

## மடியின்மை

இராசமாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஏமாங்கத நாட்டைச் சச்சந்தன் ஆண்டான். இவன்

தன் மாமனாகிய தன் மகள் விசயை என்ற பெண்ணை மணம் செய்து அரசு ஆளுதலைக் கவனியாது கட்டியங்காரன் என்னும் மந்திரியிடம் அரசை ஒப்படைத்து அவளோடு வாழ்ந்துவந்தான். நாள் செல்லச் செல்லக் கட்டியங்காரன் சச்சந்தனிடம் பகை ஆனான். பகையானதைப் பலர் சொல்லியும் சச்சந்தன் மேலும் சோம்பலையே அடைந்திருந்தான். இவ்வாறான சோம்பலைக் கண்ட கட்டியங்காரன் இவன் அந்தப் புரத்தில் இருக்கும் போது படை வீரர்களோடு வந்து வளைந்துக்கொண்டான். சோம்பலில் மூழ்கி இருந்த இவன் சிறிது சண்டை செய்து முடிவில் இறந்தான். கட்டியங்காரன் அரசன் ஆனான். இதனால் சோம்பல் உடையவன் பிறர்க்கு அடிமையாய் அழிவான் என்பதை வள்ளுவரும் விளங்கக் கூறியுள்ளார்.

**44. மடிமை குடிமைக் கண் தங்கின் ; தன் ஒன்னார்க்கு**
**அடிமை புகுத்தி விடும்.**

(பதவுரை.) மடிமை - சோம்பலினது தன்மை, குடிமைக்கண் - நல்லகுலத்தில் பிறந்தவன் இடத்தில், தங்கின் – இருக்குமானால், தன்ஒன்னார்க்கு - (அச்சோம்பல் அவனைத்) தன் பகைவர்க்கு, அடிமை புகுத்திவிடும்– தொண்டு செய்யும் ஆளாக செய்து விடும்.

(கருத்து.) சோம்பல் உடையவன் தன் பகைவர் ஏவல் கேட்டுத் தாழ்தல் வேண்டும்.

(கேள்வி.) சோம்பல் உடையவர் அடையும் கெடுதி என்ன ?

---

## ஆள்வினை யுடைமை

வானர வீரர்கள் சீதா பிராட்டியைத் தென்கோடி முழுதும் தேடி அலைந்தும் காணவில்லை. இலங்கையில் இருக்கலாமோ ? என்று எண்ணி

அனுமானை அங்குச் சென்று தேடிவா என்று அனைவரும் சொன்னார்கள். இலங்கைக்குக் கடலைத் தாண்டிச் செல்லவேண்டும். கடலை எவ்வாறு தாண்டுவது? என்று அனுமான் கலங்கியபோது அருகில் இருந்த சாம்பவான். அனுமானைப் பார்த்து "நீயோ வாயுபுத்திரன். உன் தந்தை செல்லாத இடமே இல்லை. அவ்வித பெருமையுடையவரின் பிள்ளையாகிய நீ இந்தச் சின்னக்கடலைக் கடக்கயோசிக்கிறாயே?" என்றார். இதைக்கேட்ட அனுமான் ஒரேபாய்ச்சலில் கடலின் அக்கரையை அடைந்தான். இதனால் பெரிய காரியமாயினும் மனம் தளராது செய்தால் முயற்சியால் அக்காரியம் முடியும் என்று வள்ளுவரும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

**45. அருமையுடைத் தென்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும்.**

(பதவுரை.) அருமை உடைத்து என்று - தம் சிறுமை நோக்கி நாம் இக்காரியம் முடிக்க முடியாது என்று நினைத்து, அசாவாமை வேண்டும் - தளராமை ஒழிக பெருமை - அக்காரியம் முடித்தார் கேற்ற மேன்மையை, முயற்சிதரும் - (ஒருவர்க்கு) ஊக்கம் உண்டாக்கும்.

(கருத்து.) தளராது முயற்சி செய்பவன் எக்காரியத்தையும் முடிப்பான்.

(கேள்வி.) அரிய காரியத்தை எளிதில் முடிப்பது எது?

---

## இடுக்கண் அழியாமை

சூரியனார் கோவில் ஆதீனத்தைச் சேர்ந்து விளங்கினவர் முத்துக்குமாரசுவாமிகள். இவர்கள் இலக்கணம் கற்பிப்பதில் வல்லவராகையால் இவர்களுக்கு இலக்கணசுவாமிகள் என்பது பட்டப்பெயர். இவர்கள் ஒரு நாள் மிகக் கடுமையான சுரநோயால் வருந்தி இருந்தார். அது சமயம் மாணவர்கள் பாடம் கேட்க

வந்தனர். வந்த மாணவரைக் கண்டவுடன் சுவாமிகள் தம்உடல் நோயையும் கவனிக்கவில்லை. "தம் வாழ்நாளில் பாடம் சொல்லிக் கொடுக்காத நாள் வீண்நாள் ஆகும்''. என்று சொல்லி எழுந்து மனமகிழும் படியாகப் பாடம் போதித்தனர். இதனுல் உடலைப்பற்றி இருந்தசுரமும் விலகியது. இதனுல் சுவாமிகள். உடல் சுகத்தைப்பாராமல் பாடங்கற்பித்தலே தம்கடமை என்று எண்ணிப் போதித்தமுயற்சியால்வந்த வருத்தமே அவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது. இதையே வள்ளுவரும் எற்புறுத்திச் சொல்லியுள்ளார்.

46. **இன்பம் விழையான், இடும்பை இயல்பு என்பான்;**
**துன்பம் உறுதல் இலன்.**

(பதவுரை.) இன்பம் விழையான் - தன்னுடம் பிற்குச் சுகமாயவற்றை ஆசைப்படாமல், இடும்பை இயல்பு என்பான் - தொழிலால் வரும் துன்பத்தை அனுபவித்தலே தன் கடமை என்று அறிந்திருப்பவன், துன்பம் - தன் முயற்சியால் வரும் வருத்தத்தை, உறுதல் இலன் - அடைதல் இல்லாதவன் ஆவான்.

(கருத்து.) முயற்சியுடன் தொழில் செய்து வாழ்பவன் துன்பம் அடையான்.

(கேள்வி.) இடும்பையை இயல்பு என்பவன் எதை அடையான்?

---

## அமைச்சு

1947. ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15.ம் தேதி நமக்குச் சுயராஜ்யம் கிடைத்தது. அது முதல் மந்திரி பதவியில் அமர்ந்து நடத்தி வருகிறவர் பண்டித ஜவகர்லால் நேரு. இவர், காஷ்மீர், பஞ்சாப்முதலிய இடங்களிலிருந்து டில்லி வந்த அகதிகளுக்கு வேண்டிய உதவி செய்து பாதுகாத்தார். இதனுல் பசுஒ...

இரவும் உழைக்க வேண்டிய உழைப்பிற்குத்தளராமல் முயற்சி செய்தார். முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே உண்டான கலகங்களுக்கு எதைச் செய்ய வேண்டுமோ? அதைச் செய்து எதை விலக்க வேண்டுமோ? அவற்றை விலக்கியும் கலகமுண்டாகாமல் பாதுகாத்தார். நம்நாட்டிற்கு இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று எந்நேரமும் முயன்று வருகிறார். இவை ஐந்து செயல்களைத் திருத்தமாக உடைய இவரை நாம் மந்திரியாகப் பெற்றதால், இந்தியருக்கு ஆளத் தெரியாது என்று குறை சொல்லிய ஆங்கிலேயரும், "ஒற்றுமை உணர்ச்சியோடு இந்தியரைப்போல் எவரும் ஆள முடியாது" என்று இன்று புகழ்ந்து சொல்லுகிறார்கள். இவ்விதபுகழை நமக்கு அளித்தவர் அமைச்சர் நேருவே.

**47. வன் கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு.**

(பதவுரை.) வன்கண் - (தொழில் செய்யும் போது) தளராமையும், குடிகாத்தல் - குடிமக்களைப் பாதுகாத்தலும், கற்று அறிதல் - நீதி நூல்களைப் படித்து செய்வன நீக்குவன அறிதலும், ஆள்வினை - முயற்சியும், ஐந்துடன் - (ஆகிய) இவ்வைந்தும், மாண்டது அமைச்சு - திருத்தமாக அமைந்தவனே மந்திரி ஆவான்.

(கருத்து.) அமைச்சருக்கு இந்த ஐந்து குணங்களும் அமையவேண்டும்?

(கேள்வி.) எந்த ஐந்து குணத்தையும் உடையவன் அமைச்சன் ஆவான்?

---

## வினைத்தூய்மை

நளன் நிடத நாட்டை ஆவிந்த நகரைத்தலைநகராகக் கொண்டு ஆண்டான். இவன் தன் நாட்டு மக்களிடம் அளவற்ற அன்பு காட்டி நீதி வழியில்

ஒழுகி வந்தான். இதனால் அவர்கள் உள்ளத்தைக் கொண்டான். பேருபகாரி. இத்தன்மைகள் நிறைந்த இவனிடம் புட்கரன் என்னும் பெயரையுடைய ஒரு வஞ்சகன் வந்தான். இவனை சூது விளையாட அழைத் தான். இவனும் உடன்பட்டு விளையாட. இவன் தன் நாடு, செல்வம் எல்லாம் இழந்தான். வறியனாய்த்தான் மனைவிமக்களோடு வனம் சென்றான். இதைக்கேட்ட மக்கள், "சூ தாடல் போன்ற குற்றமான தொழிலைச் செய்து பழியைத்தன்னிடம் கொண்டு அரசாளும் இப்புட்கரன் ஆட்சியில் வாழ்வதைவிட இது வரை இவ்விதமான தீயதொழிலையே அறியாத நளன் வறு மை யோடு வாழும் வனமே உயர்ந்தது" என்று எல்லோரும் காட்டை அடைந்தனர். இதைக்கண்ட புட்கரன் தான் ஆட்சி செய்வதினால் பயனில்லை என்று மீண்டும் நளன் வந்தபோது அரசை அவனி டம் ஒப்படைத்துச் சென்றான். மக்கள் மீண்டும் சுக மாகவாழலாயினர்.

48. பழி மலைந்து எய்திய ஆக்கத்தில் ; சான்றோர்
கழி நல்குரவே தலை.

(பதவுரை.) பழிமலைந்து - பொருள்தேட முடியா தார் குற்றமான தொழிலைச் செய்து அதனால்) பழியைத் தன்னிடங்கொண்டு, எய்திய ஆக்கத்தில் – பெற்ற செல் வத்தைக் காட்டிலும், சான்றோர் – (அத்தியதொழிலைச் செய்யாத) மேலோர், கழிநல்குரவே - (அனுபவிக்கும்) மிகுந்த வறுமையே, தலை - உயர்ந்தது ஆகும்.

(கருத்து.) தீய தொழிலைச் செய்து வரும் செல்வத்தை விட வறுமையே நல்லது.

(கேள்வி.) வறுமை உயர்வாவது எப்படி?

---

## வினைத்திட்பம்

### திட்பம் = உறுதி

அரசர்கள் புலவருக்கு அடக்கம் என்றதைக் கேட்ட குலோத்துங்க சோழர் கம்பருக்குத் தாம் கொடுத்த விருது செல்வம் யாவற்றையும் பற்றிக் கொண்டு வறியராய் அனுப்பினர். அப்போது கம்பர் சோழரிடம் "உம்மைப்போல் ஒருமுடியரசர் எமக்குத் தொண்டு செய்யும் நிலையோடு மீண்டும் உம்மிடம் வருவேன்" என்றுவெளியேறினர். அவ்வாறேவெளிச் சென்று சேர நாட்டை அடைந்து சேரன் அவைக் களப் புலவராக விளங்கினர். கம்பர் இல்லாதசபை மதியற்ற இரவு போல் பிரகாசம் இல்லாததைக் கண்டுசோழர் அவரை அழைக்க, அவர் சேரநாட்டை அடைந்தார். அப்போது சேரன்கூட வந்து அவர் ஆளாக, அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் தொண்டு செய்தான், நேரில் இதைக்கண்ட சோழர், "மன உறுதி உடையவர் நினைத்த காரியத்தைநினைத்த விதமே செய்து முடிப் பார்கள் என்றதை இச்சேரன் தொண்டாய்ப்பணி செய்ததிலிருந்து அறிந்தேன்" என்று கம்பரைப் புகழ்ந்து அவருக்கு முன்னிலும் பன்மடங்கு மரியாதை செய்து அவரைக் காத்து வந்தார்.

**49. எண்ணிய எண்ணி யாங்கு எய்துப; எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

(பதவுரை.) எண்ணியார் - (ஒரு காரியத்தை) நினைத்தவர், திண்ணியர் - அக்காரியத்தில் மன உறுதி உடையவர், ஆகப்பெறின் - ஆக இருந்தால், எண்ணிய- (அவர்) நினைத்த காரியத்தை, எண்ணிய ஆங்கு - அந் நினைத்த விதமே, எய்துப - அடைவார்.

(கருத்து.) மனவுறுதி யுடையவர் தாம் நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பர்.

(கேள்வி.) எண்ணியதை எண்ணியவாறே அடைந்த டவர் எவர் ?

146790
600 008

## வினைசெயல் வகை

கிருஷ்ணர் பாண்டவர்க்குப் பாதி பாகம் தரா விட்டாலும் ஐந்து வீடாவது கொடு என்று தூதராக வந்து துரியோதனனிடம் கேட்டார். அவன் இல்லை என்று மறுத்து விட்டான். பாண்டவர்களிடம் இச் செய்தியைச் சொல்ல அவர்கள் ஒவ்வொரு வரும் சண்டை செய்தலே வேண்டும் என்று முடிவு கட்டி ஞர்கள். அப்போது வேண்டாம் சண்டை என்று அக்கிருஷ்ணர் சொல்ல, அவர்கள் சண்டை செய் தேதீருவோம் என்று சபதம் செய்தார்கள், பின்போர் தொடங்க முதல் நாட்போரில் அருச்சுனன் "துரோணரையும் பீஷ்மரையும் எதிரில் கண்டு இவர் களை மலரிட்டு வணங்காது அம்புகொண்டு எவ்வாறு அடிப்பேன்" என்று தன் வில்லை எறிந்து தேரிலிருந்து இறங்கி விட்டான். அப்போது அக்கிருஷ்ணர். "ஆராய்ச்சிக் கெல்லையாவது முடிவு செய்தல். முடிவு செய்த காரியத்தில், தாமதமாவது தவறியாவது போனால் உறுதியற்ற அசத்தியன் குலதர்மம் கெட்ட வன் என்ற பழியை அடைவாய்" என்ற இக்குறட் கருத்தைச் சொல்ல அருச்சுனன் தன் மனம் தெளிந்து தான் செய்த சபதப்படி போர் செய்ய லானான்.

50. சூழ்ச்சி, முடிவு, துணிவெய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

(பதவுரை.) சூழ்ச்சி - ஆராய்ச்சிக்கு, முடிவு - எல்லை யாவது, துணிவு எய்தல் - (ஆராய்ச்சி செய்பவன் இனி இக்காரியம் தவறாது என்ற) உறுதியை அடைதலாம்,

அத்துணிவு - அவ்விதம் உறுதி செய்த தொழில், தாழ்ச்சியுள் தங்குதல் - தாமதத்தில் இருக்குமானால், தீது - குற்றம் உடையது ஆகும்.

(கருத்து.) முடிவு செய்த காரியத்தை உடனே செய்தல் வேண்டும்.

(கேள்வி.) துணிவு செய்த செயலில் தாமதம் செய்தால் வருவது யாது?

---

## குறிப் பறிதல்

வாலிக்குப் பயந்து சுக்ரீவன் ரிசியமுக பர்வதத்தில் ஒளிந்து வாழ்ந்து வந்தான். சபரி என்ற மாதின் சொற்படி இவன் நட்பை விரும்பி இராம இலட்சுமணர் இம்மலைக்கு வந்தனர். வில்லும் அம்பும் கொண்டு இவர்கள் வருகையைக் கண்டு வாலியால் தன்னை அழிக்க அனுப்பியவர்களோ? என்று அச்சுக்கிரீவன் தன் மந்திரியாகிய அனுமானை அழைத்து "நீபோய் முகக்குறிப்பால் அவர்கள் மனக்கருத்தை அறிந்துவா" என்று அனுப்பினான். அவ்விதமே சென்று வாயுபுத்திரன், தன்னைச் சேர்ந்த பொருளின் தன்மையைக் கண்ணாடி தானே கொண்டு காட்டுவதைப்போல இவர்களின் மனத்தன்மையைக் கொண்டு இவர்கள் முகம் காட்டும் கருத்தை அறிந்து வந்து தன் அரசனிடம், "உன்னோடு நட்புக் கொள்ளவே வந்தார்கள்" என்று சொல்லி இவர்களையும் தன் அரசனையும் நட்பில் கலந்து மகிழும்படி செய்தான். இதினால் மனதில் உள்ள மிகுதியான உணர்ச்சியை முகம் தானே கொண்டு பிறர்க்கு விளங்கச் செய்யும் என்றதை வள்ளுவரும் கூறினார்.

51. அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

(பதவுரை.) அடுத்தது - (தன்னைச் சேர்ந்த) பொருளின் நிறத்தை, காட்டும் - தானே கொண்டு காட்டும், பளிங்குபோல் - கண்ணாடியைப் போல், நெஞ்சம் - (ஒருவன்) மனதில், கடுத்தது - மிகுதியாக உள்ளதை, முகம் காட்டும் - அவன் முகம் தானே கொண்டு காட்டும்.

(கருத்து.) ஒருவன் மனதிலுள்ள மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் அவனது முகம் காட்டும்.

(கேள்வி.) மன உணர்ச்சியை முகம் காட்டும் என்பதற்கு வந்த உவமை என்ன?

---

## நாடு

சோழர்கள் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள். ஆனால், கரிகாலன் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். இதன் அருகே கடல் உள்ளது. இதனால் பிறநாட்டுப் பொருள்கள் இந்நகர்க்கு வரவும் இந்நாட்டில் விளை பொருள் பிறநாட்டிற்குக் கப்பல் மூலம் செல்லும் வாணிகம் பெருகிற்று. காவிரியில் நீர் மிகுதியாக வர வேண்டிய சீர்திருத்தம் செய்தான். இதனால் உழவர்கள் நிலங்களில் பாடுபட்டு விளைபொருள்களைப் பெருக்கினார்கள். பெருக்கின விளைபொருள்களைப் பலர்க்கும் தானம் செய்தார்கள். இவ்விதம் சோழ நாட்டை வளம் படுத்தியதால் பிறநாட்டில் வாழும் யவனர் முதலியவரும் தம் நாட்டைவிட்டு இந்நாட்டில் வந்து நிலையாகத் தங்கினார்கள். "பிறரும் யாதொருகுறையுமில்லை" என்று மகிழ்ந்து தங்கும் இடமே நாடாகும்.

52. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

(பதவுரை.) தள்ளா விளையுளும் - குறையாத விளைவைச் செய்வோரும், தக்காரும் - கொடுக்கும் பெரியோரும், தாழ்வு இலாச் செல்வரும் - அழிவில்லாத செல்வம் உடையவரும், சேர்வது - பொருந்தி வாழும் இடமே, நாடு - நாடாகும்.

(கருத்து.) உழவர், துறந்தோர், வணிகர் இவர்களைப் பொருந்திய நாடே சிறந்த நாடாகும்.

(கேள்வி.) எவர் பொருந்தி வாழும் நாடு சிறந்த நாடாகும்?

---

## நட்பு

இலங்கை நகரில் அசோகவனத்தில் தங்கியிருந்தாள் சீதாபிராட்டி. இவ்வம்மைத் தோழியராய் இருந்து உதவிபுரிய இராவணன் பல அரக்கியரை அனுப்பினான். அவர்களுள் ஒருவள் திரிசடை. இவள் அறிவு நிறைந்த விபீஷணன் மகள். அறிவும், நல்லொழுக்கமும் நிறைந்தவள். இவற்றால் இவள் சொற்படி கேட்டுநடக்கும் மேலான நட்பு இவ்விருவருக்கும் இளம்பிறை வளர்வதைப்போல ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டே வந்தது. ஏனைய அரக்கியர் அறிவில்லாமலும் ஒழுங்கீனமாகப் பேசியும் நடந்தும் வந்ததால் அவர்களுடைய நட்பு இவளிடத்தில் முழுச்சந்திரன் ஒவ்வொரு நாளும் தேய்ந்து வருதலைப்போல் குறைந்து முடிவில் மறைந்தே விட்டது. இவை போல் நாமும், அறிவுள்ளவர் நட்பை வளர்த்து அறிவிலார் நட்டை விடவேண்டும்.

53. நிறைநீர நீரவர் கேண்மை ; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

(பதவுரை.) நீரவர் கேண்மை - அறிவுள்ளவர் நட்புக்கள், பிறை நிறை நீர - இளம்பிறை வளர்வதைப்

போல ஒவ்வொரு நாளும் வளரும் தன்மை உடையன, பேதையார் நட்பு - அறிவில்லாதவர் நட்புக்கள், மதி - வளர்ந்த முழுச் சந்திரன், பின் நீர - பின் குறையும் தன்மைபோல ஒவ்வொரு நாளும் குறையும் தன்மை உடையன ஆகும்.

(கருத்து.) குறையும் சந்திரன்போன்ற நட்பை விட்டு, வளரும் பிறைபோன்ற நட்பை அடைதல் வேண்டும்.

(கேள்வி.) சந்திரன் வளர்தலும், தேய்தலும் அறிவிக்கும் நீதி என்ன?

---

## நட்பாராய்தல்

துரியோதனனும், அருச்சுனனும் துவாரகைக்குச் சென்று கண்ணனை நட்புடன் தங்கள் பக்கம் சேர்ந்து போருக்கு உதவிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்போது கண்ணன் எவர்பக்கம் சேர்தல் நல்லது என்று ஆராய்ந்தான். முடிவில் "உலக ஒழுக்கத்தோடு கூடிய குற்றமில்லாதவராகிய பாண்டவர் பக்கமே நட்பாகச் சேருவோம்" என்று அருச்சுனனிடம் தான் நட்பாக நின்று உதவி புரிவதாகச் சொல்லிப் பிறகு உலக ஒழுக்கத்துடன் பொருந்தாது நடக்கும் துரியோதனனுக்குத் தன் அண்ணன் பலராமனையும் தன்படை யாவற்றையும் கொடுத்துத்தான் மட்டும் நட்பில் இருந்து விலகிக் கொண்டதாகச் சொல்லி விடை கொடுத்தனுப்பினான். இவ்விதம் குற்றமிலார் நட்பைக் கொண்டு குற்ற முடையோர் நட்பை ஒன்றைக் கொடுத்தாவது விடல் வேண்டும்.

54. மருவுக மாசுஅற்றார் கேண்மை ; ஒன்று ஈத்து
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

(பதவுரை.) மாசு அற்றார் கேண்மை - (உலகத்துடன் பொருந்திக் குற்றம் இல்லாதவரது நட்பையே, மருவுக - பழகுக, ஒப்பு இலார் நட்பு - (உலகத்துடன்) பொருத்த மில்லாதவர் சிநேகத்தை, ஒன்று ஈத்து - அவர் விரும்பிய ஒரு பொருளைக் கொடுத்தாயினும், ஒருவுக - விடுக.

(கருத்து.) குற்ற முள்ளவர் நட்பைவிட்டுக் குற்ற மில்லாதவர் நட்பைக் கொள்ள வேண்டும்.

(கேள்வி.) எவர் நட்பைக் கொண்டு எவர் நட்பை விடுதல் வேண்டும்?

---

## குடிமை

சோழன் செங்கணானோடு போர் செய்த சேர மான் கணைக்காலிரும் பொறையைச் சோழன் பிடித்து குடவாயிற் கோட்டத்துச் சிறைக் காவலில் வைத்தான். சேரன் உயிர் நண்பரான "பொய்கையார்" அச்சேரனிடம், "நான் சோழனைப் பாடி உன்னையும் உன் நாட்டையும் மீண்டு உனக்கே அளிக்க அனுமதிவாங்கி வருகிறேன்" என்று சோழ னிடம் போய்க் "களவழி நாற்பது" என்ற நூலைப் பாடி சேரனையும் அவன் நாட்டையும் விடுதலையாகப் பெற்று சிறைக் கூடத்திற்கு வந்தார். அதற்குள் சேரனுக்குத் தாகம் எடுத்துச் சிறைக் காவலரை நீர் கேட்க அவர்களும் தந்தார்கள். அவர்கள் தந்த நீரைக் கையில்ஏந்திப் புலவர் "என் சிறைவாசத்தையும் மிகுதியான கோடி அளவு செல்வம் மிருந்த நாட்டு ஆட்சியும் மீட்டு வந்தாலும், சிறைக்காவலில் இருந்து சிறைக் காவலாளர் தந்த நீரைக் குடித்துக் குல ஒழுக்கம் கெடவாழ்ந்தேன் என்று வாழ் வதை விட இறப்பதே நல்லது" என்று அந்நீரைக் குடிக்

காமல் உயிரை விட்டு விட்டான். வந்த புலவர் இக் காட்சியைக் கண்டு குடிப்பிறப்பின் மேன்மையை வியந்து அச்சேரன் உயிர் விட்டமைக்குப் பெரிதும் வருந்தினுர்.

55, அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

(பதவுரை.) அடுக்கிய கோடி பெறினும் - பலவாக அடுக்கிய கோடி அளவுள்ள பொருளை அடைந்தார் ஆனு லும், குடிப்பிறந்தார் - உயர்ந்த குலத்தில் தோன்றியவர், குன்றுவ - தம் ஒழுக்கம் குறையும் தொழில்களை, செய் தல் இலர் - செய்யமாட்டார்கள்.

(கருத்து.) பெரியோர் பொருள் மிக வந்தாலும் தம் குல ஒழுக்கம் குறையும் செயலைச் செய்யார்.

(கேள்வி.) கோடி பொன் வந்தாலும் குடிப்பிறந் தார் எவற்றைச் செய்யார்?

---

## மானம்

வெண்ணிற் பறந்தலை என்னும் போர்க்களத்தில் பெருஞ் சேரலாதனேடு சோழனுக்கும் கரிகாலனுக் கும்போர்நடந்தது. அப்போரில் சோழன் விட்டஅம்பு சேரன் மார்பிலே தைத்து முதுகில் புண்ணை உண் டாக்கி வெளியே சென்றது. இவ்வித புறப்புண்ணை அடைந்ததால் தன்மானமே அழிந்ததாக எண்ணி னுன். ஒரு மயிரை இழந்தாலும் தன்னுயிரை விடும் கவரிமானின் நிலையை எண்ணினுன். இவற்றை எண் ணித் தன் உயிரை விட்டாவது மானத்தைக் காக்க வேண்டும் என்று உறுதி கொண்டான். தன் படை அரசு யாவற்றையும் நினையாது மானம் ஒன்றையே மதித்து வாளோடு வடக்கிருந்து உயிரை விட்டான். இதைக் கண்ட அனைவரும், மானத்தை விரும்பித் தன் உயிரை அளித்த அம்மன்னனை புகழ்ந்தார்கள்.

56. மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர் நீப்பர் மானம் வரின்.

(பதவுரை.) மயிர் நீப்பின் - தன் மயிர்த்திரளில் ஒரு மயிர் நீங்கினலும், வாழா - உயிர் வாழாத, கவரிமா அன்னர் - கவரிமானைப் போன்ற தன்மையுடையவர், மானம் வரின் - உயிர் விடும்படியாகத் தன் மானம் அழியும் எல்லை வந்தால், உயிர் நீப்பர் - உயிரை வெறுத்து இறப்பார்கள்.

(கருத்து.) உயிரைக் கொடுத்தாவது மானத்தைக் காக்கவேண்டும்.

(கேள்வி.) கவரிமானின் தன்மை என்ன? இது விளக்கும் நீதியாது?

---

## பெருமை

சேர சோழ பாண்டியர் இம்மூவரும் முடியுடைய மன்னர்கள். இவர்களுக்கு அடங்கிப் பறம்பு மலை என்னும் முந்நூறு ஊர்களை ஆண்டவன், பாரி இவன் முடியுடை மன்னர்களுக்கு அடங்கிக் கீழ் இருந்தாலும் கொடையில் அவர்கள் அனைவருக்கும் மேலானவன். இவனைக் கொல்ல முடியுடை மன்னர் மூவரும் முற்றுகை போட்டுப் பறம்பு நாட்டைச் சுற்றிலும் நின்றனர். இதைக்கண்டு கபிலர் வெளியே வந்து உயர்ந்த ஆசனத்தில் இருந்தாலும் எல்லோரும் பெரியவராக வாழமுடியாது. தாழ்வுடன் அடங்கிச் சிறு நாட்டில் இருந்தாலும் எல்லோரும் சிறியவராகமாட்டார். எங்கள் அரசன்பாரியைச் சிறிய அரசன் என்று எண்ணி இன்னும் பல ஆண்டுகள் முற்றுகை யிட்டாலும் வெல்ல முடியாது. விரும்பினல் யாசகமாகக் கேளுங்கள். அவனே கொடுத்து விடுவான் என்றார். அச்சொற்படியே

வஞ்சமாகப் போய் அவனைக் கொன்றார்கள். முடியுடை மன்னர் செய்கையும், "பாரியின் பெருமையும் பற்றிக் கபிலர் தாழ்ந்த நிலையில் இருந்தும் உயர்ந்த குணமுடைய உன் போன்ற நண்பனை என்று காண்பேன்" என்று வருந்தினார்.

57. மேல் இருந்தும் மேலல்லார் மேலல்லர் ; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.

(பதவுரை.) மேல் அல்லார் - (பிறரால் செய்தற்கு முடியாத தொழிலைச் செய்யாது) இழிந்தோர்கள், மேல் இருந்தும் - உயர்ந்த ஆசனத்தில் இருந்தாராயினும், மேல் அல்லர் - பெரியோர் ஆகார், கீழ் அல்லவர் - அத்தொழிலைச் செய்து பெரியராயினார், கீழ் இருந்தும் - தாழ்ந்த தரையில் இருந்தாராயினும், கீழ் அல்லார் - இழிந்தோர் ஆகார்.

(கருத்து.) மேலோரால் முடிக்க முடியாத செயலைக் கீழோர் முடித்து விடுவார்.

(கேள்வி.) எவற்றால் ஒருவர்க்குப் பெருமை உண்டாகும் ?

---

## சான்றாண்மை

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றின பெரியவர் சேக்கிழார். இவர் மக்களிடம் அன்பு கொண்டு பழிபாவங்களுக்குப் பயந்து மக்கள் நடக்கும் படியும், கருணையோடு உண்மை வழியில் நடக்கும் படியும், உலகநடையை அறிந்து வாழும் படியான நூல் உளதா? என்று ஆராய்ந்தார். இல்லை என்பதை அறிந்தார். இவ்வைந்து குணங்களும் நிறைந்த பெரியோர்களின் கதை வெளிப்படாததை அனபாய அரசனிடம் அறிவித்தார். அவன் கட்டளைப்படி சிதம் பரத்தில்

வந்து தங்கிப் பெரிய புராணத்தைப் பாடி அருளி னார். இவ்வைந்து குணமாகிய பாரத்தைத் தாங்கிய ஐந்து தூண்களையும் தம் நெஞ்சில் அமைத்து 63. நாயன்மார்கள் கதையைப் பெரிய புராணமாகப் பாடினார் இவ்வைந்து குணங்களும் நிறைந்த சான் றோர் ஆகையால் சோழர் இவரையானையில் ஏற்றி வைத்துத் தாமே சாமரை கொண்டு வீசினார்.

58. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை
ஐந்துசால்பு ஊன்றிய தூண். [யோடு

(பதவுரை.) அன்பு, நாண் - பிரியமும், (பழிபாவங் களுக்கு) வெட்கப் படுதலும், ஒப்புரவு, கண்ணோட்டம் - உலகநடை தெரிதலும், அருளுடைமையும், வாய்மை யோடு - உண்மை பேசுதலோடு கூடிய, சால்பு ஊன்றிய- நற்குணங்கள் என்ற பாரத்தைத் தாங்கிய, தூண் ஐந்து - ஐந்துதூண்கள்.

(கருத்து.) சால்புடையவர் இவ்வைந்து குணங்களை உடையவராதல் வேண்டும்.

(கேள்வி.) எந்த ஐந்து தூண்களைத் தாங்குபவர் சால்புடையவர்?

---

## குடிசெயல்வகை

காயல் பட்டினம் என்ற ஊரை அரசு செய்து பிற்காலத்தில் விளங்கினவர் சீதக்காதி. இவர் தம் மிடம் எக்குற்றமும் வராமல் நீதி வழியில் நடந்த வர். இவர்மதம் முகம்மதியமதம். தம் குல ஒழுக்கம் குறையாமல் அம்மதத்தில் உள்ள அனைவரையும் ஆதரித்தார். இவ்விதம் தாமும் குற்றமில்லாது தம் குலத்தை மேன்மையாகச் செய்து வாழ்வதைக் கேட்டு உலகில் உள்ள அனைவரும் அவரை உற வினராக எண்ணிச் சுற்றிச் சூழ்ந்து இருந்தார்கள்.

இவ்விதம் சுற்றியிருந்தவர்களில் ஒருவர் படிக்காசுப் புலவர். இவர் "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்று அவரையும் அவர் குலத்தையும் புகழ்ந்து சொன்னார்.

59. குற்றம் இலனாய்க் குடிசெய்து, வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்றும் உலகு.

(பதவுரை.) குற்றம் இலனாய்-தவறுயின செய்யாது, குடி செய்து - தன்குலத்தை மேலாகச் செய்து, வாழ்வானை - பிழைப்பவனை, உலகு - உலகத்தார், சுற்றமாகச் சூழும் - உறவாகச் சேர்த்துக் கொள்ள விரும்பித் தாமே சென்று சுற்றி இருப்பர்.

(கருத்து.) குற்றமின்றிச் சிறப்போடு வாழ்பவனை எவரும் சுற்றமாகச்சென்று சூழ்வர்.

(கேள்வி.) உலகத்தார் யாரைச் சுற்றமாகச் சென்று சூழ்வர்?

---

## உழவு

திருவெண்ணை நல்லூரில் சடையப்ப வள்ளல் என்ற ஒரு வேளாளப் பிரபு இருந்தார். அவரே கம்பரை ஆதரித்தவர். ஏழைகளுக்கு உணவு உண்டி முதலியவைகளைக் கொடுத்து உபசரிப்பவர். இவர் உபசரிப்பின் பெருமையைக் கண்டு நிலமகளும் இவருக்கு வேண்டிய விளைபொருள்களை மிகுதியாகக் கொடுத்து உதவினாள். இவருக்குத் தொடையில் ஒரு புண் வந்து துன்பப் பட்டார் அப்போது ஆண்ட குலோத்துங்கசோழர் இவரைக் காண வந்தார். புண்ணைப் பார்க்கவேண்டும் என்று சோழர் வேண்டிய போது அரசர்க்குமுன் துணியைத் தூக்கிக் காட்டுதல் மரியாதைஇல்லை ஆகையால் தாம் உடுத்திருந்த பட்

டைக்கிழித்துப் புண்ணை அரசர் பார்க்கச் செய்தார். அரசர் கண்டு நம்மால்உடுத்திருந்த பட்டுகிழிக்கப்பட்டது என்று வேறொரு பட்டை ஆளிடம் கொடுத்து கொடுக்கச் சொன்னார். அதைக்கண்ட சடையப்பர் மற்றொரு பட்டைக் கொடுத்து இரண்டையும் அரசரிடம் கொடுக்கச் செய்தார். இதனால் வேளாளர் தாம் பிறர்க்கு உதவி செய்வாரே ஒழியப் பிறரிடம் எதையும் யாசிக்க மாட்டார் என்பதைச் சோழன் அறிந்தான்.

60. இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் ; கரவாது
கை செய்து ஊண் மாலை யவர்.

(பதவுரை.) கை செய்து - தம் கையால் பாடுபட்டு உழுது, ஊண் - உண்ணுதலை, மாலையவர் - இயல்பாக உடைய உழவர், இரவார் - பிறரிடம் சென்று யாசிக்க மாட்டார், இரப்பார்க்கு - யாசிப்பவர்களுக்கு, ஒன்று - அவர் விரும்பிய ஒரு பொருளை, கரவாது - (தம்மிடம் இல்லை என்று) மறைத்துச் சொல்லாமல், ஈவர் - கொடுப்பார்.

(கருத்து.) உழவர் பிறரிடம் யாசிக்காமல் தம் பொருளைத் தர்மம் செய்வர்.

(கேள்வி.) (1) பிறரிடம் சென்று யாசிக்காதவர் எவர் ?

(2) தம் பொருளைக் கரவாது அளிப்பவர் எவர் ?

ஆவணக்காப்பக சென்னை 600 008
14699b

Printed at The Rayan Press, Madras.